www.padippakam.com


# புதிய பார்வை

பார்வை - 4 ஆவணி - 1991


## வன்னி விக்ரம, கொக்கட்டிச்சோலை, திக்குவல்ல தாக்குதல்கள்

# அரசியல்தீர்வு எனநாடகமாடும் இனவெறிஅரசின் இராணுவத்தீர்வை அம்பலப்படுத்தி நிற்கின்றன

**திக்குவல்ல, கொக்கட்டிச்சோலை, வன்னிவிக்கிரமதாக்குதல்களை நடாத்தி மனிதப்படுகொலைகளையும், பாரிய அழிவுகளையும் ஏற்படுத்தியுள்ளது இனவெறியரசின் இராணுவக் கூலிப்படை. ஆனால் இலங்கையரசும், பிரேமதாசாவும் அகிம்சைமூலம் தீர்வு, பேச்சுவார்த்தை, சர்வகட்சிமாநாடு, மாகாணசபை, சமஷ்டிமுறை என அரசியல் நாடகங்களை ஒத்திகை பார்த்தவண்ணம் நாட்களை கடத்தியபடி இராணுவதீர்வை நாடிச்சென்று தமிழ் பேசும் மக்களை அழித்தொழித்து வருகின்றன.**

கடந்த சிலவாரங்களில் பாரிய இராணுவ நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ள அரசின் கொடூரங்களுக்கு முகம் கொடுக்க முடியாமல் மக்கள் இரத்தக் கண்ணீர் வடிக்கின்றனர்.

### திக்குவல்ல தாக்குதல்

திக்குவல்ல பொலிஸ் நிலையத்தை சேர்ந்த சுமார் முப்பது பொலிசார் சிவில் உடையில் வந்து பள்ளிவாசலில் தொழுகையில் ஈடுபட்டிருந்த முஸ்லீம்களைத் தாக்கியதோடு அயலிலுள்ள வீடுகளிலும் நுழைந்து ஆண்கள், பெண்கள் கர்ப்பவதிகள், பாதசாரிகள் எல்லோரையும் தாக்கியுள்ளனர். இதில் பல முஸ்லீம் பொது மக்கள் பலத்தகாயங்களுக்கு உள்ளாகினர்.

இதுதொடர்பாக திக்குவல்ல முகியத்தீன் பள்ளிவாசல் நிர்வாகம், திக்குவல்ல வை.எம்.எம்.ஏ இயக்கம் ஆகியன இத்தாக்குதலை கண்டித்து உடனடி விசாரணை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்துள்ளன.

### கொக்கட்டிச்சோலைதாக்குதல்

கொக்கட்டிச்சோலையில் புலிகளின் கண்ணி வெடித்தாக்குதலுக்கு இலக்காகி இரு இராணுவத்தினர் பலியானதைத் தொடர்ந்து கொக்கட்டிச் சோலை, மகிழடித்தீவு, முதலைக்குடா ஆகிய கிராமங்களை சுற்றிவளைத்த இராணுவத்தினர் கண்மூடித்தனமானதாக்குதலை மேற்கொண்டுள்ளனர்

கண்ணிவெடித் தாக்குதலையடுத்து பீதியடைந்த மக்கள் பாதுகாப்பு தேடி மகிழடித்தீவு மகாவித்தியாலயத்தில் தஞ்சம் புகுந்தனர். அங்குசென்ற படையினர் மூன்று வயோதிப ஆண்களை மாத்திரம் விட்டுவிட்டுபதினாறு அப்பாவி ஆண்களை புதைகுழிக்குள் இறக்கிவிட்டு சுட்டுக்கொன்றுள்ளனர். தொழிற்சாலை ஒன்றிலுள் இருந்த ஆண், பெண் குழந்தைகள் உட்பட நாற்பத்தேழு பேரை சுட்டுக் கொன்றுள்ளனர்.

இச்சம்பவத்தில் • செஞ்சிலுவைச் சங்கத்தினர் எவரையும் •முப்பத்தாறுமணி நேரத்துக்கு இப்பகுதிக்குள் செல்ல அனுமதிக்க மறுத்த படையினர் ஐந்து கல்லூரி மாணவிகளை கற்பழித்துள்ளதாய் தெரியவந்துள்ளது. முன்னூற்று நாற்பத்திமூன்று வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட எம்.பி. களான கருணாகரன்(ரெலோ) ஜோசப் பரராஜசிங்கம்(கூட்டணி) பிரின்ஸ் காசிநாதர்(ஈ.பி.ஆர்.எல்.எவ்) ஆகியோர் பலத்த கண்டனத்தைதெரிவித்துள்ளனர்

புளொட் தலைவர் த. சித்தார்த்தன் அதிர்ச்சி தெரிவித்துள்ளார். ஈ.பி.ஆர். எல். எவ் செயலாளர் நாயகம் தோழர் க.பிரேமச்சந்திரன். இந்நடவடிக்கை தொடர்பாக விசாரணைக் கமிஷன் நியமிக்கப்படவேண்டும். இது அரசு இனப்பிரச்சினைக்கு சமாதான தீர்வுகாண முயற்சிக்கிறது என்பதை பொய்யாக்குவதுடன் இன அழிப்பு ஒன்றுக்கு இராணுவம் தயாராவதையே இக்கோரச்செயல் எடுத்துக் காட்டுகிறது எனத் தெரிவித்துள்ளார்.

இப்படுகொலைகளுக்கு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் எழுந்த கண்டனங்களை சமாளிக்கும் நோக்குடன் விசாரணைக்கமிஷன் ஒன்றை நியமித்துள்ளது

### வன்னி விக்ரம தாக்குதல்

மே மாதத்தில் பத்து தினங்களாக தாண்டிக்குளம், ஓமந்தை, நொச்சிமோட்டை பகுதிகளில் வெறியாட்டம் நடாத்திய இராணுவத்தினர் யூன்மாதத்தில் வன்னி விக்ரம என்னும் பெயரில் ஒன்பது தினங்கள் தாக்குதலை நடாத்தியுள்ளனர்.

நடைபெற்ற தாக்குதல்களில் பதினாலு லொறிகள், மூன்று மினிபஸ், இருபத்திநாலு மோட்டார் சைக்கிள்கள் சுமார் ஆயிரம் துவிச்சக்கர வண்டிகள் படையினரால் எரிக்கப்பட்டுள்ளன. பனிச்சிநீராவி, நொச்சிமோட்டைப் பகுதிகளில் பன்னிரண்டு நிரந்தரக் கடைகளும் நாற்பத்தொரு தற்காலிக கடைகளும் எரிக்கப்பட்டன. சுமார் முன்நூற்றி நாற்பது வீடுகள் எரிக்கப் பட்டும், தகர்க்கப்பட்டுள்ளன.

ஓமந்தைக் கூட்டுறவுக் கடையிலும், சிறுவர் பாதுகாப்பு நிலையத்திலுமிருந்த ஆயிரம் மூட்டை விதை நெல்லும், கோழியர்குளம், கொந்தக்காரன் குளம் பகுதிகளிலிருந்து பெருந்தொகையான தானியங்களும் எரிக்கப்பட்டன. ஈச்சங்குளம், கல்மடு, பம்பைமடு கிராமங்களில் உள்ள கூட்டுறவுக்கடைகள். மகாவித்தியாலயங்கள், வைத்தியசாலைகள் பல பலத்த சேதத்துக்குள்ளாக்கப்பட்டன.

இச்சம்பவங்களினால் சுமார் முப்பதினாயிரம் அப்பாவி பொதுமக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளனர்.

### அரசியல் தீர்வு

இவை ஒருபுறமிருக்க அகிம்சை வழியில், பேச்சுவார்த்தை மூலம் பிரச்சனைகளை தீர்க்கப்போவதாக ஜனாதிபதி வலியுறுத்தி வருகிறார். சர்வகட்சி மாநாடு நடாத்தப்படுகிறது. வெளிநாடுகளின் பிரமுகர்களின் ஆலோசனைகள் பெறப்படுகிறது. இவ்விதமான இழுத்தடிப்பு நாடகங்களினூடே, இராணுவ நடவடிக்கைகள் மூலம் இன ஒழிப்பு நடவடிக்கைகள் தொடர்கின்றன.

### புலிகளின் தாக்குதல்கள்

ஸ்ரீலங்கா படைகளின் இராணுவ பயங்கரவாதத்துக்கு முகம் கொடுக்க முடியாத புலிகள் சிங்களக்கிராமங்களில் புகுந்து அப்பாவி சிங்கள மக்களை வெட்டிப் படுகொலை செய்து வருகிறார்கள். அண்மையில் பொலநறுவை கிராமத்தில் புகுந்த புலிகள் சிங்கள கூலிவிவசாயிகளை கொலைசெய்தனர்

★ ★ ★ ★ ★




## சென்னைப்படுகொலைக்குஎதிராக தமிழகதேர்தல்பிரச்சாரங்கள்

இம்முறை நடைபெற்ற தமிழக தேர்தலுக்கான பிரச்சாரங்களில் சென்னைப் படுகொலை முக்கிய பிரச்சனையாக முன்வைக்கப்பட்டது. மக்கள் அதனை செவிமடுத்து ஈ.பி.ஆர்.எல்.எவ்.செயலாளர் நாயகம் தோழர் க. பத்மநாபா உட்பட பதின்மூன்று தோழர்களை சென்னையில்வைத்து படுகொலை செய்த புலிகளுக்கு உறுதுணையாக விளங்கிய கருணாநிதி தலைமையிலான தி.மு.க. கட்சியை நிராகரித்துள்ளனர்.

- பத்மநாபா உட்பட பதின்மூன்று ஈழப்போராளிகளை பட்டப்பகலில் சுட்டுக் கொன்ற கொலைவெறிப்புலிகளுக்கு உடந்தையாய் இருந்த கருணாநிதி ஆட்சியை நீக்கியது நியாயம் தான் என வாக்களிப்பீர்.
- பத்மநாபாவின் மனைவியின் தாலியை. கருணாநிதி பறித்தது நியாயந் தானா ?.
- சென்னைப்படுகொலை தொடர்பாக புலிகளுக்கெதிராக எதுவித சட்ட நடவடிக்கை எடுக்காததோடு அமைதிப்பூங்காவான தமிழகத்தில் சட்டம் ஒழுங்கை சீர்குலைத்ததோடு.புலிகள் மூலம் துப்பாக்கி கலாச்சாரத்தை வளர்த்து விட்ட கருணாநிதி ஆட்சி

போன்ற வாசகங்கள் கொண்ட சுவரொட்டிகள் தமிழகமெங்கும் காணப்பட்டன. இந்திரா காங்கிரஸ், இந்திய ஐக்கிய பொதுவுடைமைக்கட்சி, அ.தி.மு.க.ஆகிய கட்சிகளின் தேர்தல் விளம்பரங்கள், மேடைக்கூட்டங்களில் சென்னைப்படுகொலை முக்கியஇடம் வகுத்துள்ளமை காணக்கூடியதாக இருந்தது.

**எமது மக்களுக்கு அமைதி, சமாதானம், சமத்துவம், ஜனநாயகம் கிடைக்கும்வரை, நாம் இறுதிவரை உறுதியுடன் போராடுவோம்**

படிப்பகம்

www.padippakam.com



# எமது பார்வையில்

தமிழகத்தில் ராஜீவ்காந்தி புலிகளால் படுகொலை செய்யப்பட்டதையடுத்துஆத்திரம்கொண்ட தமிழகமக்களால் அப்பாவி ஈழத் தமிழ் அகதிகள் சிலர் கொல்லப்பட்டுள்ளனர். பலர்காயப்படுத்தப் பட்டுள்ளனர். அவர்களது நடமாட்டங்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. ஈழ அகதிகள் மீதான பொலிஸ் கெடுபிடிகள் அதிகரித்துள்ளன. அகதிகளை நாட்டைவிட்டு வெளியேற்ற வேண்டுமென்ற அரசியல்வாதிகளின் அவசரக் கூப்பாடுகள் அச்சுறுத்துகின்றன. அனைத்தையும் இழந்து உயிரைக்காப்பாற்ற கடல்கடந்து வந்த நாம் மீண்டும் மரணக் குழிக்குள் தள்ளப் பட்டு விடுவோமோ என்ற கலக்கம் அவர்களை நடைப்பிணம் ஆக்கிவிட்டது.

இந்தியாவில் வாழும் ஈழ அகதிகள் மாத்திரமல்ல இன்று உலகின் இதர பாகங்களில் வாழும் தமிழ் அகதிகள் மீதும் ஒரு வெறுப்பு அலைபரவ ஆரம்பித்துள்ளது. புலிகள் நடத்திய படுகொலையால் அனைத்து ஈழ மக்களுமே பயங்கரவாதிகள் என்ற ரீதியில் பார்க்கப்படும் நிலையும் உலகின் பார்வையில் வெறுக்கப்பட்டவர்களாக ஒதுக்கப்படும் நிலையும் தோன்றியுள்ளது

கொக்கட்டிச்சோலையில் புலிகள் கண்ணிவெடிவைத்துவிட்டு வழமைபோல் ஓடிவிட அந்தவெடி இரண்டு சிறீலங்க இராணுவத்தினரை பலிகொள்ள தருணம் பார்த்திருந்த அரசபயங்கரவாதிகள் அப்பாவிப் பொதுமக்களை துடிக்கத்துடிக்க பலிகொண்டிருக்கிறார்கள். நூற்றிஐம்பதுக்கும் மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்களைக் கொன்று, பள்ளி மாணவிகள் உட்பட பல பெண்களை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கி அப்பிரதேசம் முழுவதையும் சுடுகாடாக்கிவிட்டு இராணுவம் தனது 'கடமை'யை முடித்துள்ளது. அரசாங்கம் வழமைபோல ஒரு கண்துடைப்பு கொமிஷனை அமைத்து விட்டு தனது 'பணியை' முடித்துவிட்டது. தமது தாக்குதல் பட்டியல்களின் எண்ணிக்கையை கூட்டுவதற்காகவும் தமது வீரவரலாற்றை நீட்டுதற்காகவும் மக்களின் பாதுகாப்பு குறித்து எந்தக் கவலையுமில்லாமல் கண்ணிவெடிவைத்து நூற்றைம்பதுக்குமதிகமான அப்பாவி உயிர்களை காவுகொடுத்த புலிகள் இப்போது எதுவுமேயியாத நல்ல பிள்ளைகள் போல் 'கொக்கட்டிச்சோலை படுகொலை'களுக்காக ஐரோப்பியத் தலைநகரங்களில் நீலிக்கண்ணீர்வடிக்கிறார்கள். தமிழ்பேசும் மக்களின் சடலங்களைவைத்து அரசியல் வியாபாரம் செய்யமுனைகிறார்கள்.

புலிகள் ஏற்றுக்கொள்ளாத,மறுப்பும் தெரிவிக்காத புதுமையானகொழும்பு கூட்டுப்படைத் தலைமையகக் குண்டுவெடிப்பை அடுத்து கொழும்புக்கு அகதிகளாகத் தப்பிவந்த அப்பாவித்தமிழ்மக்களின் வாழ்க்கை அவலத்துக்குள்ளாகியுள்ளது. கொலைகாரப்புலிகளுக்கு கொழும்பிலே தளமமைத்துக் கொடுத்து அவர்களோடு கூடிக்குலாவிய ஸ்ரீலங்காஅரசு கொலைஞர்களைக் கோட்டை விட்டுவிட்டு வீதிகளிலும்,வீடுகளிலும், விடுதிகளிலும் பலநூற்றுக்கணக்கான அப்பாவித்தமிழ் இளைஞர்களையும்,யுவதிகளையும் கைதுசெய்து கடும் சித்திரவதைக்குள்ளாக்கி வருகிறது. இவர்கள் தடுப்புக்காவல்களில் அரச படையினரின் மிலேச்சத்தனமான கொடுமைகளுக்கு உள்ளாகி வருகிறார்கள்.

உணவு,மருந்து,மின்சாரம் போன்ற அனைத்து அத்தியாவசிய சேவைகளும் மறுக்கப்பட்டு ஸ்ரீலங்காஅரசின் திட்டமிட்ட பொருளாதாரத்தடையால் ஒட்டுமொத்தமாகவே மரணக்குழிக்குள் தள்ளப்பட்டுவரும் எமதுபகுதிமக்களுக்கு இத்தனை துன்பங்களுக்குள்ளும் தம்மால் முடிந்தளவு சேவைகள் செய்துவரும் பிரஞ்சுமருத்துவக்குழு,ஐ. நா. சபையின் அகதிகளுக்கான நிறுவனம், சர்வதேசசெஞ்சிலுவைச்சங்கம் ஆகியவற்றின் தொண்டர்கள்மீதும், வாகனங்கள்மீதும் அரசபடைகள் தொடர்ந்து நடத்திவரும் தாக்குதல்களும், இந்நிறுவனங்களுக்கெதிராக அரசாங்கம் அள்ளித்தெளிக்கும் வசைமாரிகளும் இந்நிறுவனங்களை தமிழ்பிரதேசங்களிலிருந்து விரட்டி தமிழ்பேசும்மக்களை நிர்க்கதியாக்குவதற்காகவேயாகும். அதேசமயம் மேற்படிநிறுவனங்கள் பாவிப்பதுபோன்ற வாகனங்களை புலிகள் தங்கள் தாக்குதல்நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவது அரசின் சதிமுயற்சிகளுக்கு பக்கபலமாக இருக்கவும் இம்மக்களின் துன்பங்களை அதிகரிப்பதற்காகவுமேயாகும்.

கிழக்கிலே தலையறுக்கப்பட்ட உடல்களும், எரியூட்டப்பட்ட சடலங்களும் காணப்படுவது சாதாரணமாகிவிட்டது. காணாமல் போபவர்களின் பட்டியல் நீண்டுகொண்டே போகிறது. அப்பாவித்தமிழ்மக்களுக்கெதிரான அரசபடைகளின் அடக்குமுறையும் அப்பாவிமுஸ்லீம், மற்றும் சிங்கள மக்களுக்கெதிரான புலிகளின் வெறியாட்டமும் தொடர்ந்துகொண்டே போகின்றன.

வடக்கிலே விமானக்குண்டுவீச்சுக்கள்,வெறித்தனமான தாக்குதல்கள், உணவுப்பற்றாக்குறை, மருத்துவவசதியின்மை..... இவை எல்லாமே வடபகுதி மக்களுக்கும் மரணத்துக்கும் இடையிலான இடைவெளியை குறைத்து வருகின்றன. மறுபுறத்தில் மூச்சுவிடமுடியாத புலிகளின் மோசமான அடக்குமுறை, சிறுவர்களுக்கு மூளைச்சலவை....யுவதிகளுக்குவெறியூட்டிஆயுதம் வழங்கல்... அனைத்துச் சிந்தனைகட்கும்,சுயாதீனசெயற்பாடுகளுக்கும் தடை.... என புலிகளின் அடக்குமுறைப்பட்டியல் நீள்கிறது. சமீப நாட்களில் பல பல்கலைக் கழக மாணவர்கள் புலிகளால் கைதுசெய்யப்பட்டதும் அவர்களது நிலை அறியப்படாமல் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. புலிகளின் தலைவர்களில் ஒருவரான யோகி, "நாற்பது வயதுக்கு கீழ்பட்டவர்கள் ஆயுதம் ஏந்த வேண்டும் நாற்பது வயதுக்குமேற்பட்டவர்கள் வாயை மூடிக்கொண்டு பேசாமல் இருக்கவேண்டும்." என உத்தரவு பிறப்பித்ததில் இருந்து புலிகளின் சாம்ராச்சியத்தில் எமது மக்கள் அனுபவிக்கும் "ஜனநாயக உரிமைகள்"பற்றி புரிந்து கொள்ளலாம்.

தாங்கமுடியாத இத்தனை துன்பங்களுக்குள்ளும் எமது மக்கள் தவிக்கின்ற இந்த வேளையில்... அரசபடையினரதும், அராஜகவாதிகளதும் அடக்குமுறை எமது மக்களின் கழுத்துக்களை நெரிக்கும் இந்த வேளையிலும் ரோம்நகரம் எரியும்போது பிடில் வாசித்த நீரோமன்னனின் கதையாக கோடிக்கணக்கான ரூபாய்களை அள்ளிவீசி "கம்உதவா" என்னும் கிராமஎழுச்சி விழாக்களை பிரேமதாசாவும் முத்தமிழ் விழாக்களை பிரபாகரனும் கொண்டாடி வருகின்றனர்.

மரணமே வாழ்வாகிப்போன எமதுமக்களின் துன்பங்களை அலட்சியம் செய்து தம்மை அரியணையில் வைத்து விழாக் கொண்டாட நிர்ப்பந்திக்கும் இந்தக்கொடுமை இருபதாம் நூற்றாண்டின் இந்த நவீனஉலகில்தான் நடக்கிறது. துன்பத்தின் எல்லையில் நிற்கும் மக்களுக்கு இழைக்கப்படும் எத்தனை பெரும் கொடுமை இது.

கரங்களிலே எழுதுகோல் எடுத்தவர்களும், சஞ்சிகை வெளியீட்டாளர்களும் இந்தநூற்றாண்டின் இந்த அநியாயத்திற்கு எதிராகக் குரல் எழுப்பப் போகிறார்களா? அல்லது தமது அடிமைத்தனத்தை கலை, இலக்கியம், நடுநிலை என்ற முகமூடிகளில் மறைக்கப்போகிறார்களா?

எம்மக்களின் இன்றைய இத்தனைதுன்பங்களுக்கும் காரணமான அரசு, புலிகள் என்ற இருதரப்பினரையும் குற்றவாளிக்கூண்டில் நிறுத்துவோம். தண்டனையை எம்மக்கள் விரைவில் வழங்குவர்.

# இணைந்தமாகாணத்துள்ளேயே இனப்பிரச்சனைக்கு தீர்வு வேண்டும்

## தமிழ்கட்சிகள் ஏகமனதாகமுடிவு

தமிழ் பேசும் மக்களின் இனப்பிரச்சனைக்கான தீர்வாக முன்வைக்கப்படும் எந்த ஒரு யோசனையும், வடக்கு கிழக்கு இணைந்த தனி ஒரு மாகாணம் என்ற கோட்பாட்டின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துவதென தமிழ் கட்சிகள் ஏகமனதாகமுடிவுசெய்துள்ளனர்.அதற்குப்புறம்பானஎந்தஒரு தீர்வு யோசனையையும் ஏற்றுக்கொள்வதற்கில்லை யென்றும் தீர்மானித்துள்ளனர்.

இனப்பிரச்சனைக்கான தீர்வொன்றைக் காண்பதற்கென இலங்கை அரசு சர்வகட்சி மாநாடு வரைவுக்குழு ஒன்றை தெரிவுசெய்துள்ளது. இதன் கூட்டத்தொடரில் சுவிஷ், யூகொஸ்லாவியா போன்ற நாடுகளின் ஆலோசகர்களை அழைத்து அலோசனை பெறுவது என முயற்சிகள் தொடர்கின்றன.

எப்படியான முடிவுகள் யார்மூலமாயினும் இனப்பிரச்சனைக்கு மேற்கொள்ளப் பட்டாலும், அது இணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்துள்ளேயே இருக்கவேண்டும் என்பதில் தமிழ் கட்சிகள் உறுதியாக உள்ளன.

இது தொடர்பாக கொழும்பில் நடைபெற்ற தமிழ் கட்சிகள்கூட்டத்தில் புளொட் தலைவர் சித்தார்த்தன், ரெலோ ஆலோசகர் என்.ஸ்ரீகாந்தா, ரெலோ செயலதிபர் கோ. கருணாகரன், ஈ.பி.ஆர்.எல்.எவ். செயலாளர் நாயகம் தோழர் க. பிரேமச்சந்திரன், தமிழ்காங்கிரஸ் தலைவர் குமார் பொன்னம்பலம், ஈ.என்.டி.எல்.எவ்.முக்கியஸ்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## செய்திச் சிதறல்கள்........

* கொழும்பு வெள்ளவத்தையிலுள்ள பிரபல வைத்தியர் வீடொன்றில் பல லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் பணம் ஆயுதபாணிகளால் கொள்ளையிடப்பட்டுள்ளது. ஆயுதபாணிகள் தம்மை புலிகள் எனகூறியுள்ளனர்.

* கடந்தவருடம் நவம்பர் மாதத்திலிருந்து சம்பளம் வழங்கப்படாதிருக்கும் வவுனியா இ.போ.ச. ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு வட பிராந்திய போக்குவரத்து முகாமையாளரை வன்னிமாவட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ். பாராளுமன்ற உறுப்பினர் தோழர் குகனேஸ்வரன் கோரியுள்ளார்.

* அண்மையில் வெளிவந்த "விடுதலைப் புலிகள்" பத்திரிகையில், நாம் ஏன் பாஸ் வழங்கினோம் எனும் தலைப்பில்,தமது இருப்பிடங்கள், நடவடிக்கைகள், நடமாட்டங்கள், பலம், பலவீனங்கள் என்பவை எதிரியை சென்றடையாமல் இருப்பதற்கு எனும் கருத்தில் கட்டுரை ஒன்று வெளியாகியுள்ளது. ஆனால் வவுனியா - பூவரசங்குளம் , மன்னார் - அடம்பன், யாழ் - வசாவிளான், மண்டைதீவு, மட்டக்களப்பு - தொப்பிகல, படுவான்கரை ஆகிய இடங்களில் படையினர் தாக்குதல் நடத்தியது புலி உறுப்பினர்களின் உதவிகொண்டுதான் என்பதை மக்கள் மறந்து விடவில்லை. ஆனால் உயிர்பயத்தால் பேசாமடந்தையாக உள்ளனர்.

* வடக்கில் இதுவரைநடந்த படையினர் - புலிகள் மோதலால் 18548 மீனவ தொழிலாளர்கள் தொழில் இழந்துள்ளனர்.அத்துடன் 391237 கிலோமீனும் 51435 கிலோ கருவாடும் வடக்கில் இருந்து ஏற்றுமதி தடை செய்யப்பட்டுள்ளதாய் மதிப்பிடப்பட்டுள்ளது.

* ராஜீவ் காந்தியின் படுகொலையின் பின்பு இலங்கையில் இரனவில்ல பகுதியில் மீண்டும் வொய்ஸ் ஒப் அமெரிக்கா வானொலி நிலையம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெறுவதாக தெரியவருகிறது.

* யாழ் நகரில் தற்கொலைகள் அதிகரித்து வருகிறது. பட்டினியை எதிர்கொள்ள முடியாமலும், புலிக்கு வரிப்பணம் செலுத்த முடியாமலும் சித்திரவதைகளை தாங்கிக் கொள்ளமுடியாமலும் இத்தற்கொலைகள் இடம் பெறுகின்றன. இதில் கூடுதலாக பல்கலைக்கழக மாணவிகள், வங்கிமுகாமையாளர்கள், ஆசிரியர்கள் அடங்குவர் என யாழ் வைத்தியசாலை மதிப்பீட்டு ஆய்வு தெரிவித்துள்ளது.

* புலிகளின் வவுனியா குழுத்தலைவர் சங்கர், கிளிநொச்சி குழுத்தலைவர் சீலன் ஆகியோர் இயக்கத்துடன் முரண்பட்டு விலகியுள்ளனர். இவர்கள் வெளிநாட்டுக்கு செல்ல முயற்சித்தும் புலிகளின் அச்சுறுத்தலால் உயிர் ஆபத்துக்கு பயந்து யாழ்பாணத்திலேயே தங்கியுள்ளனர்.

* தமிழ் பேசும் மக்கள் இன்று தமது அரசியல் தலைமைத்துவத்தை இழந்து நிர்க்கதியாகியுள்ளனர். ஆயுதம் தாங்கிய புலிகளே தமிழ் மக்களின் தலைவர்களை பலியெடுத்தனர் என கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் செல்லச்சாமி பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

* வவுனியா மாவட்டத்தில் வன்முறைக்குப்பின் செட்டிகுளம், பாவற்குளம், கந்தசாமி நகர், குருக்கள் புதுக்குளம், பெரியதம்பனை ஆகிய கிராமங்களில் முன்நூறு குடும்பங்களே வசித்து வருகின்றன. கடந்த சிலமாதங்களாக இந்த மக்களுக்கு நிவாரணப்பொருட்களோ அன்றிப் பங்கீட்டுப் பொருட்களோ வழங்கப்படவில்லை.மக்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்கியுள்ளனர்.

* கடந்த வருடத்தில் ஏற்பட்ட வன்செயல்களால் மட்டக்களப்பு மாவட்டத்தில் எழுநூற்றைம்பது கோடி ரூபா பெறுமதியான அழிவுகள் ஏற்பட்டுள்ளதாய் அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

* கொழும்பு கூட்டுத்தலைமையகத் தாக்குதலை நடாத்திய சூத்திரதாரியான வரதன் என்னும் புலி உறுப்பினருக்கு மலையகத்தில் ஒளிந்திருக்க உதவினார்கள் என சந்திரசேகர் தலைமையிலான மலையகமக்கள் முன்னணியினர் கைதுசெய்யப்பட்டு கொழும்பு கொண்டுசெல்லப்பட்டனர்.

* வடக்கு கிழக்கு மாகாணசபைக்கு இந்திய அரசினால் அன்பளிப்பு செய்யப்பட்ட வாகனங்களுக்கும் ஏனைய மாகாணசபை பொருட்கள்,உபகரணங்கள் ஆகியவற்றுக்கும் என்ன நடந்தது அவை எங்கே என வன்னி மாவட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ். பாராளுமன்ற உறுப்பினர் தோழர் குகனேஸ்வரன் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

படிப்பகம்

www.padippakam.com

# இராணுவத்தீர்வு இனப்பிரச்சினையைத்தீர்க்காது



ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகமும், யாழ்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான தோழர் க. பிரேமச்சந்திரன் (சுரேஸ்) அவர்கள், அண்மையில் இடம்பெற்ற இராணுவ கொடுரங்களைப்பற்றி பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையிலிருந்து.....................

## கௌரவ தலைவர் அவர்களே:

அரசியல் பிரச்சனை ஒன்றுக்கு இராணுவத்தீர்வுகாண முயற்சிப்பதால், இன்றேல் அரசியல் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண முடியாமல் அல்லது இயலாதிருப்பதால் இந்த நாட்டில் இந்த அவசரகாலநிலை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுக்கொண்டே வருகின்றது. புலிகளுடன் இரண்டாம் கட்டமாக யுத்தம் ஆரம்பிக்கப்பட்டு, கடந்த பதினொராம்தேதியுடன் ஒரு வருடம் பூர்த்தியாகிவிட்டது. இந்த ஓராண்டு காலத்துள் பொலீசார் உட்பட இராணுவத்தினர் இரண்டாயிரத்துக்கு மேலாகக் கொல்லப்பட்டுள்ளனர் எண்ணாயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் பொதுமக்கள் கொலைசெய்யப்பட்டுள்ளனர். லங்கா அரசாங்கத்தின் தகவலின்படி ஏறத்தாள மூவாயிரம் புலிகள் கொல்லப்பட்டுள்ளனர். ஆனால், அது எவ்வளவுதூரம் உண்மையென்பது இதுவரை தெரியவில்லை.

களைத் தொடர்ந்தும் நடத்தி வருகின்றது. என்பதை நீங்கள் கவனிக்கவேண்டும்.

இக்கொக்கட்டிச்சோலை படுகொலைகளை விசாரிக்கவென மூன்று பேரைக் கொண்ட ஒருவிசாரணைக்கொமிஷனை அதியுத்தம ஜனாதிபதி அவர்கள் நியமித்துள்ளார். இந்தக்கொமிஷன்எவ்வளவு தூரம் நீதியாக, நியாயமாகச் செயற்படப் போகின்றது என்பதில் எனக்கு சில சந்தேகங்கள் எழுகின்றன. ஏனெனில், இந்தவிசாரணைக்கொமிஷனுக்குச்சில வரையறைகள் கொடுக்கப்பட்டுள்ளன. கொக்கட்டிச்சோலைப் படுகொலையில், 67 பேர் கொலைசெய்யப்பட்டுள்ளார்கள் என்று நேற்றைய பத்திரிகையாளர் மாநாட்டின்போது கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்கள் தெட்டத்தெளிவாகக் கூறியுள்ளார். அங்கு மக்களால் கண்டெடுக்கப்பட்டுக் புதைக்கப்பட்ட சடலங்கள் தான் 67. இவைதவிர மகிழடித்தீவில் 56 பேரும், முதலைக்குடாவில் 49 பேரும்

ளும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. எனவே, அவற்றைத் திரும்பப் பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அது மாத்திரமல்ல; சம்பவம் தொடர்பாக விசாரணை செய்வதற்கு நியமிக்கப் பட்டுள்ள விசாரணைக் கொமிஷன், அங்கே நடந்ததை மூடிமறைத்து உலகத்துக்குவெறும் கண்துடைப்புக்காக நியமிக்கப்பட்ட விசாரணைக் கொமிஷனாக இருக்கக் கூடாது.

> இந்தநாடு முன்னேற வேண்டுமென்றால் நாட்டின் பொருளாதாரம் முன்னேற்றமடையவேண்டுமென்றால் - நிச்சயமாகவே வடக்கு கிழக்கு மாகாணங்களில் இன்று நிலவுகின்ற பிரச்சினைகளுக்கு உடனடியாக அரசியல் தீர்வு ஒன்றைக் கானவேண்டும்.

இங்கே மிகவும் வியப்புக்குரியவிடயம் என்னவென்றால் சர்வகட்சி மகாநாட்டில் DRAFTING COMMITTEE கட்டத்தின்போது யுகோசிலாவியா, சுவிற்சலாந்து போன்ற நாடுகளிலேயிருந்து தூதுவர்களைக் கூப்பிட்டு அவர்களிடமிருந்து இந்த இனப்பிரச்சினைக்கான ஆலோசனைகளைப்பெற வேண்டும் எனச் சர்வகட்சி மகாநாட்டு குழுவின்தலைவராக இருக்கக்கூடிய ஏ.சீ.எஸ். ஹமீத் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

நான் இன்னுமொரு விடயத்தையும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கடந்த ஒன்றரை வருடகாலமாக சர்வகட்சி மகாநாடு ஒன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இனப்பிரச்சனைக்குத் தீர்வொன்றைக் காணும் பொருட்டு பல்வேறுபட்ட அரசியல் கட்சிகள் அந்த மகாநாட்டில் பேச்சுவார்த்தைகளை நடத்திக்கொண்டிருக்கின்றன. பல்வேறுபட்ட ஆலோசனைகள்-PROPOSALS சர்வகட்சி மகாநாட்டிலே சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இவ்வளவு காலமும் இந்தச் சர்வகட்சி மகாநாடு நடைபெற்றுக்கொண்டிருந்தும் கூட அந்த மகாநாட்டினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

> புலிகளும் கூட பல்வேறு படுகொலைகளைப் புரிந்துள்ளார்கள். அநுராதபுரம் படுகொலை, கொழும்பில் குண்டுவைத்து நடத்திய படுகொலைகள், அரந்தலாவைப் படுகொலைகள்- இப்படிப் பல்வேறு படுகொலைகளைப் புலிகள் நடாத்தி உள்ளார்கள். புலிகளுக்கும் அரசபடையினருக்கும் இடையில் என்னவித்தியாசம் உங்களுக்குத்தெரிகிறது என்று கேட்கவிரும்புகிறேன்.

கடந்த ஒருவருட காலத்துள் இப்பிரச்சினைக்கு ஓர்அரசியல் தீர்வைக் காணாதிருப்பதால் கொலைகள் எவ்வளவுதூரம் அதிகரித்துச் செல்கின்றதென்பதை நாம் கவனிக்கவேண்டும். அதியுத்தம ஜனாதிபதிஅவர்களும் இந்த அரசாங்கமும், "புலிகளுக்கு எதிராகவே இந்தயுத்தம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது; தமிழ் மக்களுக்கெதிராகஅல்ல" என்று மீண்டும் மீண்டும் கூறியிருந்தும் கூட, கொக்கட்டிச்சோலையில் இடம்பெற்ற படுகொலைகளை நாம் பார்க்கிறோம். அதுமாத்திரமல்ல தமிழ் மக்களுக்கு எதிராக யுத்தமல்ல என்று கூறப்பட்டிருந்தும்கூட, இந்த ஒருவருட காலத்துள் எண்ணாயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். இறுதியாக, கொக்கட்டிச்சோலையில் இப்படியான ஒரு படுகொலை நிகழ்ந்துள்ளது. இந்தப்படுகொலை என்பது லங்கா இராணுவத்தைப் பொறுத்தவரை இதுவே ஏற்கனவே பலமுறைகள் நடத்தப்பட்டுள்ளன. வல்வெட்டித்துறை படுகொலை, குமுதினிப்படகு படுகொலை, தங்கவேலாயுத படுகொலை - இப்படிப் பல்வேறுபட்ட படுகொலைகள் இராணுவத்தினரால் இதற்கு முன்னரும் நடத்தப்பட்டுள்ளது.

இதுவரை காணாமல்போயுள்ளனர். அங்கு 120 க்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டிருக்கலாம் என்று கௌரவ உறுப்பினர் யோசப் பரராசசிங்கம் அவர்கள் கூறியிருக்கிறார். ஆனால், அங்கு இந்த விசாரணைக் கொமிஷனுக்குக் கொடுக்கப்படும் தகவல்கள் என்ன ? 67 பேரே கொலைசெய்யப்பட்டுள்ளார்கள். அதற்கு மேலே கொலை செய்யப்படவில்லை என்ற அடிப்படையில் ஒரு RESPONSIBLE அமைச்சர் திட்டவட்டமாகக்கூறியுள்ளார். அதுமாத்திரமல்ல இந்த விசாரணைக் கொமிஷனுக்கு இன்னும்சில வழிகாட்டுதல்களைக் கொடுத்துள்ளார்கள். அதாவது 12 ம் திகதி இந்தக் கண்ணிவெடிச் சம்பவம் நடந்தபொழுது, புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் இந்தப்பொதுமக்கள் கொல்லப்பட்டார்களா ? இல்லையேல் இராணுவத்தினர் REVENGE எடுப்பதற்காக இந்தக் கொலைகளைச் செய்தார்களா என்பதைக் கண்டறியுமாறு கொமிஷனுக்குக் கூறப்பட்டுள்ளது.

கடந்த 12 ம் திகதி நடைபெற்ற கண்ணிவெடிச்சம்பவத்தில் மூன்று இராணுவத்தினர் கொலைசெய்யப்பட்டுள்ளார்கள். அதைத் தொடர்ந்து 12ம்

> புலிகளுக்கு எதிராகவே இந்தயுத்தம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்களுக்கெதிராகஅல்ல. என்று மீண்டும் மீண்டும் கூறியிருந்தும் கூட, கொக்கட்டிச்சோலையில் இடம்பெற்ற படுகொலைகளை நாம் பார்க்கிறோம். அதுமாத்திரமல்ல தமிழ் மக்களுக்கெதிரான யுத்தமல்ல என்று கூறப்பட்டிருந்தும் கூட இந்த ஒருவருட காலத்துள் எண்ணாயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். இறுதியாக கொக்கட்டிச்சோலையில் இப்படியான ஒரு படுகொலை நிகழ்ந்துள்ளது.

புலிகளும் கூட பல்வேறுபடுகொலைகளைப் புரிந்துள்ளார்கள். அநுராதபுரம் படுகொலை, கொழும்பில் குண்டுவைத்து நடத்திய படுகொலைகள், அரந்தலாவைப் படுகொலை - இப்படிப் பல்வேறு படுகொலைகளைப் புலிகள் நடத்தியுள்ளார்கள். புலிகளுக்கும் அரசபடையினருக்கும் இடையில் என்ன வித்தியாசம் உங்களுக்குத்தெரிகின்றது என்று கேட்க விரும்புகிறேன். புலிகள் ஒரு பாசிசக்குழு. அவர்கள் எந்தவிதப்பேச்சுவார்த்தைக்கும் வர விரும்பாதவர்கள். அவர்கள் தமிழினத்துக்கெதிராகவே செயற்படுகின்றார்கள். அது நூற்றுக்கு நூறுவீதம் உண்மை. ஆனால் இந்த நாட்டு மக்களைப் பொதுமக்களைப் பாதுகாக்க வேண்டிய அரசாங்கத்தின் இராணுவம் இப்படியான படுகொலை

தேதியும் 13 ம் தேதியும் தொடர்ச்சியாக நடைபெற்ற இராணுவத் தாக்குதல்களின் போதுதான் இந்தப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள் என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். அதுமாத்திரமல்ல, 141 வீடுகள் முற்றாக எரிக்கப்பட்டுள்ளன. 343 வீடுகள் எரிக்கப்பட்டு அங்கிருந்த சகல பொருள்களும் கொள்ளை அடிக்கப்பட்டுமுள்ளன.

அங்கேயிருக்கின்ற ஒவ்வொரு வீட்டிலும் கொள்ளையடிக்கப்பட்ட பொருட்கள், ஆண்டாண்டு காலமாக நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைத்து அவர்கள் சேர்த்து வைத்திருந்த பொருட்கள். ஒவ்வொரு வீட்டிலும் அவற்றில் எந்தப்பொருளும் இல்லாத அளவுக்குச் சகல பொருட்க

## சொல்லவும் வெட்கமடா

தேர்தலில் தோற்றுப்போவோம் எனஉணர்ந்துகொண்ட மூனாகானா இறுதி முயற்சியாக ராஜீவின் கொலையை தொடர்ந்து காங்கிரஸ், அ. தி. மு. க. கட்சித் தொண்டர்கள் தி.மு.க.வினரை தாக்கியதை மக்களிடம்சொல்லி அனுதாப அலையை உருவாக்குமாறு தொண்டர்களைக் கேட்டார். ராஜீவ் படுகொலை, கோடம்பாக்கம் படுகொலை அலைகள் மூனாகானாவின் அனுதாப அலையை அடித்து சென்றுவிட்டது ஐயோ பாவம். யாரை நம்பி நான் பிறந்தேன் போங்கடா போங்க என் காலம் வெல்லும் வென்றபின்னே.....

வடக்கு கிழக்கில் மூலவளம் இல்லை ஆனால் மூளைவளம் உண்டு என்ற அரிய விடயத்தை கண்டுபிடித்து, கொக்கலையில் சுதந்திர வர்த்தக பதனிடும் வலயத்துக்கான அடிக்கல் நாட்டுவிழாவில் பேசியமைக்காக இவ்வாண்டு புதிய கண்டுபிடிப்புக்கான லங்காரத்னா விருதைப்பெற்றுள்ள அன்புதாசர் பொத்துவில் ஊடாக தெற்கையும் கிழக்கையும் இணைக்க உத்தேசித்துள்ளதாய் தெரிவித்துள்ளார். இணைந்த வடக்கு கிழக்கிலேயே இனப்பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்கின்றனர் தமிழ் கட்சிகள். கிழக்கையும் தெற்கையும் இணைக்க வேண்டும் என்கிறார் அன்புதாசர், கிழக்கு தனித்துவமாக வேண்டும் என்கிறார் சபாநாயகர். கிழக்கு எங்கே போகிறது ஒருவன் மனது ஒன்பதடா அதில் ஒழிந்து கிடப்பது எண்பதடா...............

முத்தமிழ் விழாவில் நான்குவருட வனவாசத்திற்கு பின்புதோன்றிய தங்கத் தலைவருக்கு முன்னூறு மாவீரர்கள் பாதுகாப்பாம். இதுவே போதாதென்று எண்ணிக்கையை கரும்புலியிலிருந்து கூட்டலாமா வரிப்புலியிலிருந்து கூட்டலாமா என மாநாடு நடக்கிறதாம். அல்லல்படும் தமிழ்பேசும் மக்களுக்கு யார் பாதுகாப்பு. எத்தனை காலம் தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே, சொந்த நாட்டிலே.

வடக்கு கிழக்கில் தொடர்ந்து பிரச்சினை நடந்து கொண்டிருக்கவேண்டும் என விரும்புவர்களில் இப்போது முன்னணி வகுப்பவர்களில் கொழும்பில் உள்ள வாடகை வீட்டுச்சொந்தக்காரர்களாம். அங்குபிரச்சினைநடந்தால் கொழும்புக்கு அகதிகள் ஓடிவந்தால் வாடகைப்பணமும், முற்பணமும் எனச் சுளையாக வாங்கலாம் என்ற பேராசைதான் காரணமாம். காசேதான் கடவுளடா அந்தக் கடவுளுக்கும் இது தெரியுமடா............

நாடு வன்முறைக்குள் அகப்பட்டு அல்லோலகல்லோலப்பட்டுக் கொண்டிருக்கிறது. எங்கும் வெடிச்சத்தம், கொலை, கொள்ளை, குண்டு வெடிப்புகள். ஆனால் நாடு அமைதியாக இருப்பது போல கம் உதவா கண்காட்சியில் சிறந்த மீசை, பெரியவயிறு, நல்ல வழுக்கை போட்டிகள்வைத்து பரிசுகள் வழங்குகிறார் நாட்டின் பாதுகாவலர் வெற்றிதுங்கா.
மக்கள் அரசியல் அனாதைகளாக்கப்பட்டு பட்டினிச்சாவை எதிர் நோக்கியிருக்கையில் பலகோடிரூபா செலவில் முத்தமிழ் விழா நடாத்தி பரிசுகள் வழங்குகிறார் தங்கத்தலைவர். றோம் நகர் தீப்பற்றி எரிகையில் பிடில் வாசித்த நீரோ மன்னனின் வாரிசுகள் இவர்கள். பொல்லாத காசு பணம் பூமிதனைஆளுதடா .எல்லாமேஇழந்தமனம் ஏங்கி ஏங்கி தவிக்குதடா...

வடக்கு கிழக்கில் காணாமல் போனோர் விபரங்களை சேகரித்து கண்டுபிடித்து உதவுவதாக கூறி பாலம் என்ற பெயரில் நிறுவனம் ஒன்றை யாழ்ப்பாணத்தில் நடாத்தி வருகிறார் சிறை மீண்ட செம்மலும் மாவீரர்களின் வலது கையுமான பாதிரியார் வனராஜராஜர். மட்டக்களப்பிலிருந்து காணாமல் போனோர் விபரங்களுடன் வந்த குழு ஒன்று பாலத்துக்கு போய் இவரிடம் கண்டுபிடித்து தருமாறு கேட்டனராம். இது மட்டக்களப்பு விவகாரம் மட்டக்களப்பு தூதுவராலயம் இந்த விலாசத்தில் உள்ளது அங்கேபோய் விசாரியுங்கள் என்று விலாசம் கொடுத்தனுப்பினாராம். அங்கேபோன மட்டக்களப்பு குழுவினர், திருகோணமலை தூதுவராலயம், மன்னார் தூதுவராலயம் என ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒரு தூதுவராலயம் இருக்கும் அரசியல் வறுமையை கண்டு அதிர்ச்சி அடைந்தனராம். உலகம் அறியாத புதுமை இது. இதுஉலகம் அறியாத புதுமை மாவட்டங்களுக்கே தூதுவராலயம் வைப்பது உலகம் அறியாத புதுமை........

படிப்பகம்

www.padippakam.com

# அன்பார்ந்த தமிழ்ப்பேசும் மக்களே

சிறிலங்கா அரசு-புலிகள் ஆகிய இரு தரப்பினராலும் எம்மக்கள் மீது திணிக்கப்பட்ட யுத்தம் ஒரு வருடத்தைக் கடந்து விட்டது.இந்தக் காலப் பகுதியில் எம் மக்களுக்கு இறப்புக்களையும், இழப்புக்களையும், எல்லையற்ற துன்பங்களையும் தவிர வேறு என்ன கிடைத்திருக்கிறது...? எதிர்காலமே சூன்யமாய் போனது தவிர வேறு என்ன சம்பவித்திருக்கிறது...?

அரசாங்கமும் பட்டியல் போடுகிறது தான் கொன்ற புலிகளின் எண்ணிக்கையை..... புலிகளும் பட்டியல் போடுகிறார்கள் எத்தனை படையினரைதாம் கொன்று குவித்தோமென. ஆனால் எல்லையற்ற துன்பங்களை தாங்கி இன்று பிணங்களாகவும், நடைபிணங்களாகவும் ஆகிவிட்ட எம்மக்களைப் பற்றி பேசுவது யார்....? எம் மக்களுக்காக பேசுவது யார்...?

ச் சலவை செய்யப்பட்டு போராட்டமென்று ஏமாற்றப்பட்டு புலிகளால் களப் பலி கொடுக்கப்பட்ட பாலகர்கள் மற்றும் யுவதிகளின் எண்ணிக்கை எல்லாமாகச் சேர்ந்து இன்று பல ஆயிரங்களைக் கடந்துவிட்டன அல்லவா.

இந்த ஒரு வருடத்துள் புலிகளின் அராஜகம் எம் மக்களின் குரல் வளையை நசித்தே விட்டது. சொந்த மண்ணை விட்டு முஸ்லீம் மக்கள் அடித்து விரட்டப்பட்டு அவர்களது சொத்துக்கள் புலிகளால் சூறையாடப்பட்ட அவலம். பாஸ் என்றும் பவுண் என்றும் வீடு,வளவு என்றும் எம் மக்கள் காலம் காலமாய் கடும் உழைப்பினால் சேர்த்த சொத்துக்கள் எல்லாம் புலிகளால் பறிக்கப்படும் அவலம். பேசமுடியாது.... எழுதமுடியாது விமர்சிக்கமுடியாது. புலிகளது "சட்ட திட்டங்களை"மீறினால் துப்பாக்கிக் குண்டுகளே பரிசு. அவர்கள் கூறுவதே

[illegible] கட்டுப்படுத்தப்பட்டன. சிறிலங்காப் படைகளின் தொந்தரவுகள் நிறுத்தப்பட்டன. அகதிகள் நாடுகள் திரும்பும் நிலை ஏற்பட்டது. பல்வேறு அமைப்புக்களைச் சார்ந்திருந்தாலும் தகுதியான.... திறமையானவர்களின் கையில் மாகாண அரசின் நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டது.

ப்பினர்கள் அரச தரப்பினரால் அவமதிக்கப்பட்டுள்ளனர். நீர்கொழும்பில் எமது தோழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.அரச சார்புச் செய்தி நிறுவனங்களும்,புலிகளின் ஊது குழல்களும் எம் மீது சேறுகளை வாரி இறைக்கின்றன.

**எமது மக்களின் துன்பங்களைப் பகிரங்கப்படுத்துவதற்காக.... பொது எதிரியான ஸ்ரீலங்கா அரசுக்கு சேவகம் செய்ய மறுப்பதற்காக .... சிங்கள முற்போக்கு சக்திகளோடு கைகோர்த்து ஸ்ரீலங்கா அரசுக்கெதிராக போராடுகின்ற காரணத்துக்காக.... இந்தியாவின் முக்கியத்துவத்தை உணர்ந்து இந்தியாவோடு நட்புறவு கொண்டிருப்பதற்காக.... புலிகளின் பாசிசத்திற்கெதிராக இன்னமும் துணிந்து குரல் கொடுப்பதற்காக ....எமது மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக்கான முற்படுவதற்காக இன்றும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அரசினாலும்,புலிகளினாலும் வதைக்கப்படுகிறது.வசைபாடப்படுகிறது.**

**உணவில்லை, மருந்தில்லை, மின்சாரமில்லை வாழ்வதற்கான வசதிகள் ஏதுமில்லை. இன்று எம்மக்களின் வாழ்க்கையை கற்கால மனிதவாழ்க்கை நிலைக்கு தள்ளிவிட்டது அரசின் திட்டமிட்ட பொருளாதாரத்தடை. இன்று எம்மக்கள் தேசத்துக்குள்ளும் அகதிகள்.தேசங்கள் தோறும் அகதிகள்.**

கடந்த ஒரு வருடத்துக்குள் எம் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் எவ்வளவு துன்பமானவை.எம்மக்கள் மீது இழைக்கப்பட்ட கொடுமைகள் எவ்வளவு குரூரமானவை.தன்னுடைய தீவின் ஒரு பகுதியில் வாழும் மக்கள் மீதே வெறித்தனமாக விமானக்கழுகுகள் மூலம் குண்டு வீசி கொலை வெறியாட்டம் ஆடும்

செய்தி .....இட்டதே சட்டம்.தமது உயிரைக் காப்பாற்ற அகதிகளாகத் தப்பிப் போகும் உரிமை கூட அற்றவர்களாக எமது மக்கள் மறுபடியும் அவலம். சுதந்திரத்தை வேண்டி நின்ற மக்களுக்கு புலிகள் தந்த பரிசு இது.

எம் மக்கள் மீது இந்த யுத்தத்தைத்

அது மாத்திரமல்ல இக்காலத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்றது. பாராளுமன்ற தேர்தல்கள் நடைபெற்றன. பல கட்சிகளும் போட்டியிடும் நிலை இருந்தது.பத்திரிகைச் சுதந்திரம் இருந்தது.எமக்கெதிராக வெகுதாராளமாகவே பத்திரிகைகள் எழுதின. பல கூட்டங்கள் நடந்தன. . நூல்கள் வெளியிடப்பட்டன. கலை இலக்கிய விழாக்கள் நடந்தன.தொழிற்சங்கங்கள் மீளக் கட்டியெழுப்பப்பட்டன.

இவை அனைத்தும்..... அமைதி .... சமாதானம்-ஜனநாயகம் நோக்கிய எமது அனைத்து முயற்சிகளும் புலிகள்-அரசு கூட்டுச் சதியால் முறியடிக்கப்பட்டன. இந்த எமது முயற்சிகளின்போது எழுநூறுக்கும் அதிகமான எமது உன்னதத்

அரசியல் அனாதைகளாகிப் போன எமது மக்களின் துன்பங்களில் குளிர்காய்ந்து காலத்தைக் கடத்திக்கொண்டு எந்தவித அரசியல் தீர்வையும் முன்வைக்க விரும்பாது, முடியாது இருக்கும் அரசும் புலிகளும் ஒருபுறம். வேண்டுமென்றே நாம் அரசுடன் கூடிக்குலாவுவதாக கற்பனைக் கதைகளை, வதந்திகளை, பொய்ப்பிரச்சாரங்களை அரசியல் சிந்தனையற்று வெளியிடும் சித்தாந்த வித்தகர்கள் ஒருபுறம்.

இவர்களுக்கு நடுவே கலங்காது, மயங்காது உறுதியுடன் அரசியல் மாற்றங்களுக்கேற்ப அந்தந்தகாலகட்டங்களில் மக்களின் சுபீட்சத்தை, சகஜ வாழ்க்கையை, அரசியல் தேவைகளை கணக்கில் கொண்டு அரசியல் தீர்வுகளை முன்வைத்து, அரசியல் அரங்கில் வரும்

# அன்பார்ந்த தமிழ் பேசும் மக்களே!

சிறிலங்கா அரசாங்கம்,இன்று பதுங்கு குழிகளையும், அகதி முகாம்களையும் எமது மக்களின் நிரந்தர வசிப்பிடங்களாக்கி விட்டது.

உணவில்லை.....மருந்தில்லை...மின்சாரமில்லை....வாழ்வதற்கான வசதிகள் ஏதுமில்லை. இன்று எம் மக்களின் வாழ்க்கையையே கற்கால மனித வாழ்க்கை நிலைக்கு தள்ளிவிட்டது அரசின் திட்டமிட்ட பொருளாதாரத் தடை. இன்று எம் மக்கள் தேசத்துக்குள்ளும் அகதிகள் தேசங்கள் தோறும் அகதிகள்.

எமது மக்கள் வாழ்வதற்கான அடிப்படை உரிமைகளை மாத்திரமல்ல இன்று அவர்களின் அன்றாட வாழ்வு நடப்பதற்கான அத்தியாவசியப் பொருட்களையும் வழங்க மறுக்கும் சிறிலங்கா அரசு எமது மக்களை நரபலி எடுக்கும் நவீன ஆயுதங்களையும், குண்டுவீச்சு விமானங்களையும் கொள்வனவு செய்ய கோடிக் கணக்கான ரூபாய்களை வாரி இறைக்கின்றது.

மறுபுறத்தில் எல்லைகளைக் கடந்துவிட்ட புலிகளின் பயங்கரவாதமும்..... அராஜகமும்.... அடக்குமுறையும். இந்த ஒரு வருடத்தில் புலிகள் எம் மக்களுக்கு வழங்கியதென்ன.பல்லாயிரக் கணக்கான அப்பாவி உயிர்களைப் பலியெடுத்தும்,பல கோடி பெறுமதியான தமிழ்பேசும் மக்களின் சொத்துக்களை நாசமாக்கியதும், தமிழ் பேசும்மக்களின் பேச்சுச் சுதந்திரத்தை மாத்திரமல்ல மூச்சுச் சுதந்திரத்தையும் பறித்ததும், உலக அரங்கில் சர்வதேசப் பயங்கர

திணித்து எம் மக்களை எல்லையற்ற துன்பங்களுக்கு சொந்தக்காரராக்கிய இந்த இரு தரப்பினரும் இன்னும் சமாதானத்தைப் பற்றிப் பேசிக்கொண்டே யுத்தம் புரிகிறார்கள். அமைதியைப் பற்றிக் கூறிக்கொண்டே அராஜகம் இழைக்கிறார்கள். மக்களுக்காக என்று கூறிக்கொண்டே மக்களைக் கொல்கிறார்கள்.

புலிகளாக இருந்தாலும் சரி, சிறிலங்கா அரசாக இருந்தாலும்சரி இவர்கள் எம் மக்களின் எதிரிகள் மாத்திரமல்ல முழு மனித குலத்தினதும் எதிரிகள் என்பதை இந்த ஒரு வருடம் நிரூபித்திருக்கின்றது.

அன்பாந்த தமிழ் பேசும் மக்களே துன்பங்களினால் துடிக்கும் இந்த நிலையில் கடந்த காலத்தைக் கொஞ்சம் திரும்பிப்பாருங்கள்.எமது மக்கள் அமைதி, சமாதானம்,ஜனநாயகம் ஆகியவற்றை பெற்றுவிட வேண்டும் என்பதற்காக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியினராகிய நாம் எடுத்த முயற்சிகளைக் கொஞ்சம் மீள நினைத்துப்பாருங்கள்.

**எம்மக்கள் மீது இந்த யுத்தத்தைத்திணித்து எம்மக்களை எல்லையற்ற துன்பங்களுக்கு சொந்தக்காரராக்கிய இந்த இரு தரப்பினரும் இன்னும் சமாதானத்தைப் பற்றிப் பேசிக்கொண்டே யுத்தம் புரிகிறார்கள்.அமைதியைப் பற்றிக் கூறிக்கொண்டே அராஜகம் இழைக்கிறார்கள். மக்களுக்காக என்றே கூறிக்கொண்டே மக்களைக் கொல்கிறார்கள்.**

தோழர்களை இழந்தோம். அதன் பின்னர் எமது செயலாளர் நாயகத்தையும் பன்னிரு தோழர்களையும் இழந்தோம்.இந்தப் படுகொலை இந்திய, சிறிலங்கா இராணுவமோசெய்யவில்லை பாசிசபுலிகளே செய்தார்கள்.எமதுமக்களின் துன்பங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க முயன்றதற்காக புலிகள் எமக்கு வழங்கிய பரிசு இது.

எமது மக்களின் துன்பங்களைப் பகிரங்கப்படுத்துவதற்காக.....பொது எதிரியான சிறிலங்கா அரசுக்கு சேவகம் செய்ய மறுப்பதற்காக.....சிங்கள முற்

அரசியல் தீர்வுகளை ஆராய்ந்து ஆதரவு வழங்க முடியுமாயின் ஆதரவு வழங்கி, மக்களுக்கு உதவாதவற்றை நிராகரித்து அல்லது விமர்சித்து வருகிறோம். இதில் எங்களுக்கு பூரண வெற்றி கிடைத்தாலும், கிடைக்காவிட்டாலும் காலத்துக்கேற்ற அரசியல் மாற்றங்களில் நாம் வெளியே பார்வையாளர்களாக நின்று வேடிக்கை பார்க்க விரும்பியது இல்லை.

ஆனால் அன்பார்ந்த தமிழ்பேசும் மக்களே இத்தகைய நீசச் செயல்களால் எம் மக்களின் துன்பங்களைத் தணிக்கும் எமது முயற்சிகளை யாரும் தடைபோட முடியாது. பாசிசம் வென்றதாய் வரலாறு கிடையாது.அதுபோல மக்களுக்கான உண்மையான உழைப்புக்கள் தோற்றதாயும் வரலாறு கிடையாது.

அன்பாபர்ந்த தமிழ் பேசும் மக்களே இந்தத்துன்பங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமாயின் துரோகிகளையும், விரோதிகளையும் அடையாளம் காணுங்கள்.முற்போக்குச் சக்திகளின் கரங்களைப் பலப்படுத்துங்கள்.

**அரசாங்கமும் பட்டியல் போடுகிறது தான் கொன்ற புலிகளின் எண்ணிக்கையை... புலிகளும் பட்டியல் போடுகிறார்கள் எத்தனை படையினரை தாம் கொன்று குவித்தோமென.ஆனால் எல்லையற்றதுன்பங்களை தாங்கி இன்றுபிணங்களாகவும்,நடைப்பிணங்களாகவும் ஆகிவிட்டஎம்மக்களைப்பற்றி பேசுவதுயார்**

வாதிகள் என்ற பட்டத்தை தமிழ் பேசும் மக்களுக்கு பெற்றுக் கொடுத்ததும் தானே.

இந்த ஒரு வருட காலத்துக்குள் புலிகளால் கொல்லப்பட்ட இதர அமைப்புக்களைச் சேர்ந்த தமிழ் இளைஞர்களின் எண்ணிக்கை....புலிகளால் கொல்லப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களின் எண்ணிக்கை, புலிகளால் கொல்லப்பட்ட புத்திஜீவிகள் மற்றும் சமூகப் பெரியவர்களின் எண்ணிக்கை.... எதிர்க் கருத்துக்களையும், விமர்சனங்களையும் முன்வைத்ததால் புலிகளால் கொல்லப்பட்டவர்களது எண்ணிக்கை..... புலிகளால் படுகொலை செய்யப்பட்ட அப்பாவி முஸ்லீம் மற்றும் சிங்கள மக்களின் எண்ணிக்கை அதுமாத்திரமல்ல மூளை

எமது மக்கள் மூச்சு விடுவதற்கான இடைவெளி ஒன்றைப் பெறவேண்டும் என்பதற்காக சில விட்டுக்கொடுப்புக்களைச் செய்து இந்திய-இலங்கை ஒப்பந்தத்திற்கு ஆதரவு வழங்கினோம். ஒப்பந்தத்தின் கீழான மாகாண அரசுப் பொறுப்பை தைரியத்துடன் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி கொண்டு ஏற்றுக்கொண்டோம். மாகாண அரசின் ஆட்சிக் காலத்தின்போது புலிகளின் இடையூறுகளையும் மீறி அபிவிருத்தி வேலைகள் நடைபெறவில்லையா.... ? போக்குவரத்துக்கள் சீரடையத் தொடங்கவில்லையா ....? மக்கள் நடமாட்டம் வழமைக்கு வரத்தொடங்கவில்லையா ? வர்த்தகம் மற்றும் வேலைவாய்ப்புக்கள் அதிகரிக்கத் தொடங்கின. சிங்களக்

போக்கு சக்திகளோடு கைகோர்த்து சிறிலங்கா அரசுக்கு எதிராக போராடுகின்ற காரணத்துக்காக.... இந்தியாவின் முக்கியத்துவத்தை உணர்ந்து இந்தியாவோடு நட்புறவு கொண்டிருப்பதற்காக.....புலிகளின் பாசிசத்திற்கெதிராக இன்னமும் துணிந்து குரல் கொடுப்பதற்காக.......எமது மக்களின் பிரச்சனைக்கு அரசியல்த் தீர்வைக்கான முற்படுவதற்காக இன்றும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அரசினாலும்,புலிகளினாலும் வதைக்கப்படுகிறது. வசைபாடப் படுகின்றது. கொழும்பிலே, எமது தோழர்கள் அரச படையினரால் கடத்திக்கொலல்லப்பட்டுள்ளனர். மோசமாகத் தாக்கப்பட்டுள்ளனர்.பாராளுமன்றத்தில் எமது உறு

* * * * * *

எமது மக்கள் என்றைக்கு அமைதியான சுதந்திரக் காற்றை சுவாசிக்கின்றார்களோ அன்றைக்குத்தான் நாம் ஓய்வெடுத்துக்கொள்ள முடியும்.

தோழர் க. பத்மநாபா

* * * * * *

www.padippakam.com



# வாசகர் பார்வையில்

உங்கள் வெளியீடுகளைத் தொடர்ந்தும் வாசிக்கும் ஒரு வாசகன். காலத்தின் கோலத்தால் தேசத்தின் போராட்ட நீரோட்டத்தில் நானும் அள்ளுண்டு போய்விட்டேன். காற்றடிக்கும் பக்கமெல்லாம் சாயும் நாணல் போல உறுதியில்லாது இருந்ததினால் நீங்கள் சொல்லிய உண்மைகளை எல்லாம் மறந்து விட்டேன். அன்று இலங்கை இந்திய ஒப்பந்தத்தை தமிழ் மக்கள் மூச்சு விடுவதற்கான இடைக்கால தீர்வாக ஏற்கிறோம் என்றீர்கள். ஆனால் தமிழ் ஈழத்தைத் தவிர்ந்த எதையும் ஏற்க மாட்டோம் என்றவர்களின் மோசவலையில் அகப்பட்டு மூச்சு விடுவதை மறந்து இருந்து விட்டேன். இன்று மூச்சு விடமுடியாமல் முக்குளிக்கும்போது உங்கள் தீர்க்க தரிசனமான பார்வையை எண்ணிப் பார்க்க முடிகிறது. அதனால் வெட்கத்தை விட்டு பலஉண்மைகளைச்சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்தியாவின் கைக்கூலி, அடிவருடிகள், காட்டிக்கொடுப்பவர்கள்,துரோகிகள் வீபிடணர்கள் என்றெல்லாம் உங்களை நானும் சேர்ந்துபேசினேன். ஆனால் நீங்கள் அந்த கொள்கை உறுதிப்பாட்டிலிருந்து சற்றேனும் அசையவில்லை. "இந்து சமுத்திரப் பிராந்தியம் அமைதி வலயம்" "இந்தியாவின் நட்பு எங்களுடைய போராட்டத்திற்கு இன்றியமையாதது" என்பவைகளைச் சொல்லிய போது உங்களைக் கையாலாகாதவர்கள் என்றுகூட நினைத்ததுண்டு. இன்று இந்தியாவின் தயவு இல்லாததினால் அவர்கள் எங்களுக்காகக் குரல்கொடுக்காததினால் சர்வதேச சமூகத்திற்கு எமது உண்மைப்பிரச்சினைகளை எடுத்துக் கூற எவரும் முன்வரவில்லை. நீங்கள் சொன்னபோது உங்களை வசை மொழிகளால் எள்ளிநகையாடியவர்கள்(நானும்)தான் இன்று அதே இந்தியாவிடம் தஞ்சம் அடைய முன்வந்துவிட்டார்கள். பழையநிகழ்வுகளை கெட்டகனவுகளாக மறந்து இலங்கைத் தமிழ்மக்கள் பிரச்சினையை தீர்த்துவைக்க முன் வரவேண்டும் என்ற பாங்கில் வேண்டுதல்கள் ஒருவர் மாறி ஒருவராக விடத்தொடங்கிவிட்டார்கள். மாமியார் உடைத்தால் மண்குடம் மருமகள் உடைத்தால் பொன்குடம் என்றமாதிரியில் இவர்கள் செயல் நடைபெறுகின்றன.

உண்மையிலை தமிழ்பேசும் மக்களுக்கு மாகாணசபை ஒரு தீர்வாக இணைந்த ஈழத்துள் வந்திருக்கும் என்பதை இப்பொழுது என்னால் உணரமுடியுது.ஆனால் அப்பேக்கை அவர்கள் சொல்லுறதுதான் எனக்கும் சரியெண்டு பட்டது. அவையளும் வரதராசப் பெருமாளின்ரை மாகாணசபையைக் கலைச்சுப்போட்டு புது மாகாணசபைக்கு தேர்தல் வையுங்கோண்டுதானே கேட்டினம். உண்மையில இந்திய இராணுவத்தை அனுப்ப தேவைப்பட்ட உதவிபோல தமிழ்மக்களுக்குக் கிடைத்த அற்பசொற்ப சட்டச்சலுகையையும் இவயின்ரை உதவியோடையே பிரேமதாஸ இல்லாமல் செய்திட்டார். இவையள் இன்னும் தங்களைக் கெட்டிக்காரர் எண்டுகொண்டு இருக்கினம். தமிழ் மாகாணசபையுமில்லை தமிழருமில்லை. கிழக்கு ஐரோப்பிய நாடுகளின்ரை போராட்ட நடைமுறைகளைப் பார்க்கும்போது சிறுபான்மை இனங்களுக்கான நிலையானஎல்லைகளையுடைய பிரதேசங்களும், அரசுகளும் இருந்தபடியாற்றான் இன்றைக்கும் அம்மக்கள் அதிலிருந்து தங்களின் உரிமைகளுக்காகப் போராடுகிறார்கள். இப்படியான ஒரு வடிவைத்தானே அன்றைய வட - கிழக்கு மாகாணசபை தோற்றுவித்திருக்கும். அதுக்கு அன்றைய மக்கள் ஆதரவு கொடுத்திருந்தால் இலங்கையின் தென்மேற்கிற்கு ஓடவோ, வடக்குக் கிழக்கில் அகதியாகவோ, வெளிநாட்டினின் தூங்குமான்களாய் நாடுவிட்டு நாடுதாவியும் தப்ப முடியாமல் காடுகாடாப் போகிறார்கள் என்ற பயப்பீதியோடு ஏன் அவலப்படவேண்டும். இப்படி எத்தனையோ நல்லவைகளை நீங்கள் செய்தும் உங்களை ஏன் சனங்கள் அனுசரிக்க வில்லை ? புலியளின்ரை மோகமோ அல்லது உங்கடை நடைமுறைப் பிரச்சனைகளோ ?

இதிலை இரண்டு காரணங்கள் மறுக்கப்பட முடியாதவை. (1) வடக்கிற்கும் கிழக்கிற்கும் இடையில்உங்கடை நடைமுறை வித்தியாசமாக இருந்தது. இதிலை உங்கடை சமூகப் பார்வையை வடக்கிலை உள்ளவை பெரும்பாலும் ஏற்க மறுத்திட்டினம். இதோடை நீங்களும் பல விடயங்களை வலுக்கட்டாயப் படுத்தியிருக்கிறியள். மச்சானும் கோயிலுக்குப் போறானெண்டு நானும் போனமாதிரி புலிகள் செய்கிறார்கள் என்டு நீங்களும் செய்து உங்கடை கொஞ்ச நஞ்ச மதிப்பையும் கெடுத்துப் போட்டியள். பெடியளைப் பிடிச்சியள் உங்கடை நோக்கம் நல்ல நோக்கம். வெற்றி பெற்றிருந்தால் உங்களை எவரும் அசைக்கவே முடியாதிருந்திருக்கும். இதுகளை அவர்கள் தெரிந்து செயற்பட்டாங்கள். அவங்கள் மட்டுமல்ல உங்கடை கொள்கையை புரியாத, விளங்கிக்கொள்ள விரும்பாத எல்லாருமே உங்களுக்கு எதிராகச் செயல்பட்டினம். இன்டைக்கும் அவர்கள் பிடிக்கிறார்கள், வெறு தவ்வல்களைப் பிடித்து சென்றிக்கும், முன்னணிக்கும் விடுறாங்கள் அதுகளுக்கு இலங்கைப் படத்தின்ரை எந்தப்பக்கம் வடக்கு கிழக்கு மேற்கு தெற்கு, எந்த மாகாணம் எங்கே இருக்கு எண்டு எதுவும் தெரியாது ஆனால் யாருமேஎதிர்க்கவில்லை. இதை தேசிய எழுச்சியெண்டு உயர்த்திக்கூட சிலபேர் வாசிக்கினம். அவை என்னசெய்தாலும் செய்யட்டும் ஆனால் மாகாணசபைக் காலத்தில் மக்களுடனான உங்கடை அணுகு முறைகள் மிக மிக கடுமையானவை. சில சொல்லும்தரமற்றவை. இது குடாநாட்டிலை இன்னும் வேறு விதமாக நடந்தும் இருக்கிறது. இதை நீங்கள் ஒருமுறை சுயவிமர்சனம் செய்து திருத்தி மக்களுக்கான சரியான மார்க்கத்தைக் காட்ட ஏன் முயலக்கூடாது. உங்களைக் குறைசொன்னவையள் இந்தியாவின்ரை கூட்டையும், மக்களோடை இருந்த அணுகு முறையையும் தவிர உங்கடை நேர்மையிலை அரசியல் நடைமுறையிலை பிழைபிடிக்கமுடியவில்லை

சிலவேளை வரதராசப் பெருமாளிலை தனிக்காய்சலோ தெரியாது. அந்தக் காரிலை போனார் இந்தக் காரிலை போனார் எண்டும் சொல்லிச்சினம். என்னசெய்கிறது ஏனைய மாகாணசபை முதல்வர்கள் மாதிரி வரதராசப் பெருமாளும் இருந்திருக்கவில்லைத்தான். மற்றது இதுகளைச் சொல்லுறவியளுக்கு முதல்வரா வாற ஆசையிருக்காதே.அவையள் முதல்வராய் வந்தால் நடையிலை அல்லது மாட்டுவண்டியிலை அதுபேந்து ஒற்றை மாட்டுவண்டியோ இரட்டையோ, இல்லை சயிக்கிலோ சயிக்கிலும் பழகவேண்டும். இதுகளை விட்டிட்டு நீங்கள் வந்த பாதையை ஒருமுறை திருப்பிப் பார்த்து ஏற்ற இறக்கங்களையும், குண்டுகுளிகளையும் விமர்சனம் செய்யவேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

மாசிலாமணி
(பிரான்ஸ்)

நான் உங்கள் பத்திரிகைகள் தொடர்ந்து பொற்றுவருகிறேன். இங்கு உங்களைப்பற்றிப்பலர் பொய்ப்பிரச்சாரத்தில் தீவிரமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் "புதிய பார்வை" எல்லாவற்றிற்கும் பதில் கொடுக்கும் வகையில் வருவது எனக்கு திருப்தியாகவும், சந்தோசமாகவும் உள்ளது. புதிதாகப் பல பத்திரிகைகள் வருவதும் போவதுமாக உள்ளன. அப்படி அல்லாமல் புதிய பார்வை தொடர்ந்து வரவேண்டும் என்று விரும்புகிறேன். "சொன்னாலும் வெட்கமடா" பகுதி மிகவும் நன்றாக இருக்கின்றது. புதியபார்வை மூன்றில் ரஜனி திரணகம எழுதிய "முறிந்த பனை" கட்டுரை தொடராக வருவதை வரவேற்கிறேன். இதே பத்திரிகையில் வந்த அன்பார்ந்த தமிழ் பேசும் மக்களே பகுதியில் ராஜீவ்காந்தியைப்பற்றிய கட்டுரையில் எனக்கு முரண்பாடு உள்ளது.

அக்கட்டுரையில் ராஜீவ் காந்தி தமிழ் பேசும் மக்களின்மேல் அன்பு செலுத்தினார் என்றும், அவர்களது பிரச்சனை தீர்ப்பதில் நிறைந்த கரிசனமும், அக்கறையும் ஆர்வமும் கொண்டிருந்தார் என்றும் சொல்லப்பட்டுள்ளது. சொந்த நாட்டு மக்களையே நேசிக்காதவர் அவர்களது பிரச்சினைளைத் தீர்த்து வைக்காதவர், இன்னொரு நாட்டு மக்களை நேசித்தார். அவர்களது பிரச்சினைகளைத் தீர்க்க முற்பட்டார் என்பது வேடிக்கையாக இருக்கின்றது. இந்தியா எமக்குத்தந்த ஆதரவு ஈழ விடுதலைப் போராட்டம் வெற்றியடைய வேண்டும் தமிழ் பேசும்மக்கள் சகல உரிமைகளோடும் சுதந்திரமாக வாழ வேண்டும்என்பதற்காகவல்ல இலங்கையைத் தனது ஆதிக்கத்திற்குள் தொடர்ந்து வைத்திருக்கவேண்டும் என்பதற்காகவுமே இந்தியாவின் தலையீட்டில் சிறிதளவே தமிழ் பேசும் மக்களின் நலன் அடங்கியுள்ளது. தனிப்பட்ட ராஜீவ் காந்தியைப் பற்றிப்பார்க்கும் போது இவர் தனது ஐந்து ஆண்டுகால ஆட்சியின் போது எத்தனை ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்படுவதற்கு காரணமாய் இருந்தார். போபாலில் மட்டும் ஒரேஇரவில் பத்தாயிரம் பேர் கொல்லப்பட்டனர். இவர்களுக்கு கிடைக்க வேண்டிய நஷ்டஈட்டுத் தொகையை இவர்களுக்குக் கிடைக்கவிடாமல் தானும் தனது கூட்டாளிகளுமாகச்சேர்ந்து சுருட்டியவர். பஞ்சாப்பில் பல ஆயிரம் சீக்கியப் பொது மக்கள் கொல்லப்படுவதற்கு காரணமாயிருந்தவர். இதே போன்று கஷ்மீர், அஸ்ஸாம் போன்ற இடங்களில் கொல்லப்பட்ட மக்கள் எத்தனை பேர். இதற்கு எல்லாம் யார் காரணம்? ராஜீவ் காந்தி தனது இத்தாலிய நண்பர்களுடன் சேர்ந்து செய்த ஆயுத விற்பனைகள், ஊழல்கள் எத்தனை. பாபர் மசூதிப்பிரச்சினையை தூண்டிவிட்டு அதில் குளிர்காய்ந்தவர் ராஜீவ். இப்படிப்பட்ட ஒருவர் இன்னொரு நாட்டு மக்களை நேசித்தார், அன்பு செலுத்தினார் என்பதும் அவர்களது போராட்டத்தை ஆதரித்தார் அதைத் தீர்ப்பதில் ஆர்வம் காட்டினார் என்பதும், உலக மக்களாலும் விடுதலை இயக்கங்களாலும் நேசிக்கப்பட்டார் என்பதும் வெறும் கண்மூடித்தனமான வர்ணனையே இக்கட்டுரைக்கும் நீங்கள் முன்பு உங்கள் பத்திரிகைகளில் எழுதிய இந்தியா பற்றிய,இந்தியாவிற்கும் உங்களுக்கும் உள்ள உறவு பற்றிய கட்டுரைகளுக்கும் நிறைய முரண்பாடு உள்ளது. இதுபலர் உங்களைச் சந்தேகக்கண்ணோடு பார்க்கத் தூண்டும்.

எஸ். சுகந்தன்
(பேர்லின்)

## நேற்று என்ன சொன்னோம் ?

வடக்கு கிழக்கு மாகாணசபையை இயங்கவிடாமல், சிவில் நிர்வாகத்தை தடைசெய்வதன் மூலம் மக்களை சகஜ வாழ்க்கைக்கு திரும்ப விடாமல் தடுப்பதற்காக இலங்கை அரசுடன் கை கோர்த்துக் கொண்ட புலிகள், பத்திரிகைகளை தடை செய்திருந்தகாலத்தில் வெளிவந்த "விடுதலை" பத்திரிகையின் தலையங்கங்களிலிருந்து................

### அமைதியும் ஜனநாயகமும்

அமைதியின்மையையும், அழிவுகளையும் யாரும் விரும்பமாட்டார்கள். தமிழ்பேசும் மக்களும் தேவையற்ற யுத்தத்தினையும் அமைதியற்ற வாழ்க்கையையும் விரும்பவில்லை என்பது கண்கூடு.

83 லிருந்து 87 வரை தவிர்க்க முடியாமல் நடத்தவேண்டியிருந்த ஒருபோராட்டத்தினையும், அதனைத் தொடர்ந்து இன்றுவரை காரணமின்றிச் சுமத்தப்பட்ட யுத்தத்தின் கொடூரங்களையும் தமிழ்பேசும் மக்கள் அனுபவித்து விட்டார்கள்.

நமது மண்ணில் ஓடிய இரத்தத்தினையும் தெருவெங்கும் நிறைந்த பிணக்குவியல்களையும் பார்த்துக்கொண்டே தளராத மனங்களுடன் உரிமைகளை வென்றெடுப்பதற்கான விடுதலைப்போராட்டம் நடக்கிறது எனஎண்ணி அவலங்கள் அனைத்தையும் தாங்கிக்கொண்டிருந்த மக்கள், யுத்தம் திசைதிரும்பி போராட்டம் என்பது போட்டிக் கொலைவெறியாக மாறியதைக் கண்டு மனங்கலங்கினார்கள்.

இத்தகைய சூழ்நிலையில் அனைவரும் எதிர்பார்க்கும் அமைதியான ஜனநாயகச்சூழலை ஏற்படுத்திக்கொள்ளவும், யுத்த அழிவுகளையும், தலை அறுவடைகளையும் அறவே இல்லாதொழிக்கவும் என்ன செய்யவேண்டும் என்பதே இன்று நாம் விடைகாணவேண்டிய கேள்வியாகும்.

பலதரப்பிலிருந்து வெவ்வேறு விதமான வழிமுறைகள் வைக்கப்படுகின்றன. இதில் சிலர் என்னசெய்யவேண்டும் என்பதில் தெளிவான அபிப்பிராயம் எதுவுமில்லாமல், வெறுமனே குழப்பமான கருத்துக்களையும், முடிவுகளையும் வெளியிடுவதோடு மட்டும் நின்றுவிடுகின்றனர்.

இதில் முன்வைக்கப்படும் தீர்வுக்கான ஆலோசனைகளில் பிரதானமானது, அமைதிப்படை வெளியேறிவிட்டால் இங்கு அமைதி வந்துவிடும்என்பதாகும். இக்கருத்தானது தமிழ்பேசும்மக்களை கொதிக்கும் சட்டியிலிருந்து நழுவி நெருப்புக்குள் விழவைப்பதாகவே இருக்கும் என்பதை சற்று சிந்திக்கும் எவரும் சுலபமாகவே புரிந்து கொள்ளமுடியும்.

ஸ்ரீ லங்கா அரசபடைகள் மீண்டும் வடக்கு கிழக்கில் குவிக்கப்படும் என்பதற்கான அரசின் அறிவிப்புகளும், உள்ளுக்குள் மோதலை தீவிரமாக்கும் அறிகுறிகளையே கொண்டிருக்கும் தமிழ் அமைப்புக்களுக்கிடையேயான ஒற்றுமையின்மையும் பேராபத்தான சூழ்நிலையையே இங்கு தோற்றுவிக்கும்.

தமிழ் அமைப்புக்கள் ஒன்றுபடவேண்டும். அதன் மூலமே அமைதி பிறக்க வழியுண்டு என வலியுறுத்தும் அதேசமயம் அத்தகைய ஒற்றுமை உருவாக்கக்கூடிய மார்க்கத்தினையும் அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

"ஒற்றுமை வேண்டும் ஒற்றுமை வேண்டும்" என வாய்கிழியக்கத்துவதால் அது ஏற்பட்டுவிடப் போவதில்லை. இதுவே தமிழ் பேசும்மக்களின் கடந்த கால அனுபவமாகும்.

இனியாவது ஐக்கியம் உருவாக்குவதற்கான அடிப்படை வழிமுறைகளை நேர்மையான முறையில் அணுகுதல் வேண்டும். ஒற்றுமைக்குத் தடையாக இருக்கும் காரணங்களைத் தகர்த்தெறிந்து அமைதியையும், ஜனநாயகத்தையும் உருவாக்குவதில் மக்களும் தம்பங்கைச் செலுத்தவேண்டும். இதில் கடந்தகாலத்தைப்போன்று பொதுமக்கள் பார்வையாளர்களாக இருக்கக்கூடாது. ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான தங்களது பங்கைச் செலுத்த முன்வர வேண்டும்.

தமிழ் அமைப்புக்களிடமுள்ள ஆயுதங்கள் அனைத்தும் பொது எதிரிக்கெதிராக திருப்பப்படுவதும், உள்ளுக்குள் மோதலை ஏற்படுத்தப்பயன்படும் ஆயுதங்கள் எத்தரப்பிலிருந்தாலும் அவைகளையப்படவேண்டியதும் அவசியமாகும்

இந்த நோக்கின் அடிப்படையில் வடக்கு கிழக்கில் இயங்கக்கூடிய அனைத்து அமைப்புக்களும் மக்களை நேசிக்கும் சக்திகளும் ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் இணைந்து, தமிழ் மக்களையும் எமது பாரம்பரிய மண்ணையும் பாதுகாப்பது என்னும் அடிப்படையில் செயற்படுமாயின் அதுவே மக்களுக்கு விமோசனத்தை தேடிக்கொடுக்கும்.

(விடுதலை - 22.10.1989.)

★ ★ ★ ★ ★ ★ ★

www.padippakam.com

# தோழர்களின் நினைவுகளில்....

எமது செயலாளர் நாயகம் தோழர் பத்மநாபா மற்றும் பதினொரு தோழர்களுடன் சென்னையில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்த தோழர் கிருபாகரன் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மத்திய குழு உறுப்பினராவார்.

வடக்கு கிழக்கு மாகாண அரசின் நிதி அமைச்சராக இருந்த தோழர் கிருபாகரன் அவர்கள் 1989-06-07 பேரவை அமர்வில் ஆற்றிய வரவுசெலவுத்திட்ட உரையிலிருந்து.......

எமது போராட்ட வரலாற்றில் நேரடியாகப் பங்கெடுத்துக் கொண்டவன் என்றவகையில் இப் புலிகள் கூட்டத்தின் செயற்பாடுகள் எமதுபோராட்டத்தை எவ்வாறுபாதித்தது என்பதையும், விலை மதிக்கமுடியாத ஆற்றலும், திறமையும் கொண்ட போராளிகள் எவ்வாறு கோடாரிக்காம்புகளால் அழிக்கப் பட்டனர் என்பதையும் நான் நேரில் கண்டவன். யாழ்ப்பாணத்தில் மதிப்பிற்குரிய தோழர் ஸ்ரீ சபாரத்தினம் முதல் மட்டக்களப்பில் எமது அன்புக்குரியதோழர் தெரியின் கொலை வரை நாம்அனைத்தையுமே அநுபவரீதியாககண்டவர்கள். இவர்களின் இக் கொலைவெறி எமது தமிழ் இளைஞர்களின் அடிப்படை உரிமையான போராடும் உரிமையையே இல்லாதொழித்தது. அவர்கள் அக்காலகட்டத்தில் அவ்வினைசெயலைமட்டும் செய்யவில்லை அதற்குமேலாக தொழிற்சங்கங்களை கலைத்தார்கள், சமூகசேவை நிறுவனங்களை இயங்காமல் தடுத்தார்கள். கூட்டம் கூடும் உரிமையை பறித்தார்கள், ஒட்டுமொத்தமாகக் கூறுவதாக இருந்தால் புலிகளின் கொலைவெறிக் கலாச்சாரத்தால் ஜனநாயகமும் சமூக ஒழுக்கமும் இல்லாதொழிக்கப்பட்டது.

இந்நிலைமையில் எமது மண்ணில் இருந்து "சமூக அந்தஸ்துள்ள பெரியவர்களின்" பிரஜைகள் குழுக்கள் புலிகளின் புகழ்பாடிய வண்ணமே இருந்தனர். யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் திருகோணமலையிலும் புலிகளால் உருவாக்கப்பட்ட பிரஜைகள் குழுவினர், தினம் தினம் பத்திரிகை அறிக்கைகளில் புலிகளே தமிழ்மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்றும், அவர்களுடன் இந்திய அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் எனவும் கோரினார்களேஒழிய எல்லோரினதும் ஜனநாயக உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கத் தவறிவிட்டார்கள். தமது அறிக்கைகள் மூலமாக சர்வதேச கவனத்தைத் திசைதிருப்பி இந்தியஅரசைப் புலிகளுடன் பேசவைப்பதன் மூலமாகவே தமது சுயநலன்களையும் பாதுகாத்துக் கொள்ளலாம் என நம்பினார்கள்.

ஆனால் எம்மைப் பொறுத்த வரையில் உண்மையில் மீண்டும் ஜனநாயகம் மலர வேண்டும். ஒவ்வொருவருக்கும் கருத்தை வெளியிடும் உரிமைகிடைக்கவேண்டும் விரும்பிய அனைவரும் விரும்பிய நேரத்தில் பொதுக்கூட்டம் நடத்தும் நிலைமைஏற்படவேண்டும். பத்திரிகைகள் யாரையும் துதிபாடாது உண்மை நிலைமையை வெளிக்கொண்டுவரக் கூடிய வாய்ப்பு ஏற்படவேண்டும் என நாம் விரும்பினோம். அப்படி ஒரு நிலை தோற்றுவதாக இருந்தால் புலிகளின் கையில் ஆயுதமில்லாத நிலைமை தோன்றவேண்டும். பாசிச கொலை வெறியர்கள் அடக்கப்படவேண்டும். அப்போதுதான் அமைதியையும், சமாதானத்தையும் ஏற்படுத்த முடியும் என்னும் முடிவிற்கு நாம்வந்தோம்.



அவ்வாறான முடிவைநாம் மேற்கொள்ளும்போது அதில் உள்ள கஷ்டங்களையும் அதனால் உடனடியாக எமக்கு எதிராக வரக்கூடிய அவப்பெயர்கள் பற்றியெல்லாம் நாம் தெளிவாகவேஇருந்தோம். புலிகளிடமிருந்து ஆயுதங்களைக் களையும் இந்திய சமாதானப் படையினர் முயற்சிக்கு பக்கபலமாக இருந்து உதவுவது என்னும் முடிவை உடனடியாக மக்களுக்கு புரியவைப்பதற்கு எமக்குச் சாதனங்கள் இல்லை என்றபோதும், நீண்ட நாட்களில் அதனைச்சாதிக்கலாம் என்பதனை நாம் முழுமையாக நம்பினோம்

இந்திய சமாதானப்படையினர் எம்மை நம்பும்படி செய்வதற்கு நாம் பெரிதும் சிரமப்படவேண்டி ஏற்பட்டது. எல்லா வகையான சிரமங்களையும் நாம் ஏற்றுக்கொண்டு எமது சமுதாயக்கடமையிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தோம். புலிகளின் ஆதரவாளர்களான சமூகப் பிரமுகர்கள் இந்திய சமாதானப்படையுடன் மிக நெருக்கமாக இருந்து கொண்டு எமக்குப் பெரும் துன்பங்களை ஏற்படுத்தினார்கள்.

அதே வேளை இந்தியாவின் கைக்கூலிகள் என்றும், புலிகளின்போராட்டத்தை பூரி சப்பாத்திக்காகக் காட்டிக்கொடுப்போர் என்றும், முகமூடிகள் என்றும், புலிகளாலும் அதேபுலிகளின் பிரமுகர்களாலும் ஜனநாயகத்தை மீட்கும் எமது நடவடிக்கைகள் கொச்சைப்படுத்தப் பட்ட வேளையிலும்கூட நாம்உறுதியாக நின்றோம். அதனால் நாம் அன்று மேற்கொண்ட துணிச்சலான முடிவுகளினதும் செயற்பாடுகளினதும் பெறுபேற்றினை அனைத்து மக்களும் இன்று காணக்கூடியதாக இருந்தது.

பாசிசம் எவ்வளவுதான் வல்லமையுடையதாக இருந்தாலும் அறிவுள்ள, ஜனநாயகம் விரும்பும் ஒரு சமூகம் அப் பாசிசத்திற்குப் பணிந்து போக முடியாது என்பதே எனது கருத்தாகும்.

நாம் மாகாணசபைக்கான தேர்தலை நடத்துமாறு கோரிக்கைகளை விடுத்த வேளையில் துடியெடுத்தவனெல்லாம் தண்டல்காரன் என்னும் நிலைமை இருந்தது. தேர்தல் நடைபெற்று அரசு உருவாக்கப்பட்டபின்னர் அனைத்துமே குறிப்பிடத்தக்க அளவு பலப்படுத்தப்பட்டு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது.

அறுவடையைப் பங்குபோட்டுக் கொள்வதற்கு ஈரோஸ்காரர்கள் போல் ஆயிரக்கணக்கான கட்சிக்காரர்கள் வருவார்கள். ஆனால், நச்சுப் பாம்புகளும், கொடிய மிருகங்களும் கொண்ட காட்டைவெட்டிப் பண்படுத்தி கழனியாக்கி தண்ணீர்விட்டு ஜனநாயகப் பயிரை வளர்ப்பதற்கு, நெஞ்சில் உரமும், நேர்மைத்திறனும், அரசியல் கூர்மையும் கொண்டவர்களால் மட்டுமே முடியும்.

விலைமதிக்க முடியாத தியாகங்களினூடாக, மீட்கப்பட்ட இந்தஜனநாயகச் சூழ்நிலையைத் தொடர்ந்தும் பாதுகாப்பதற்கும், மேலும் வளர்ப்பதற்கும், இச்சபையில் அமர்ந்துள்ள கட்சிகளின் உறுப்பினர்களும், வடக்கு கிழக்கில் வாழுகின்ற அனைத்து மக்களும் எந்தத் தியாகங்களைச் செய்வதற்கும் தயாராக இருக்கவேண்டும் எனவும், இச் சந்தர்ப்பத்தில் பகிரங்க வேண்டுகோள் ஒன்றைவிடுக்கிறேன்.

## மௌனமான மக்கள் வாய்திறந்தால்.

பூமியென்னும் பந்தை
புரட்டுவதற்கு பூகோளத்தில்
அவ்வப்போது தோன்றும்
புரட்சிக்காரர்
வரிசையிலே வந்தவனே நாபா!
பொறுமைக்கும் அன்புக்கும்
இலக்கணமாய் இருந்து
மாபெரும் பொறுப்பு வகித்தாய் நீ!

எதிரியிடமும் அன்பு காட்டினாய்
அதையுணர்ந்திராத அன்பின்
எதிரிகள் - உன்
மூச்சை நிறுத்தி விட்டார்களே
அவர்களால் நிறுத்த முடிந்தது - உன்
மூச்சை மட்டுமே - ஆனால் நீ
சிந்தித்தவற்றை இந்த உலகில்
எவராலும்
நிறுத்த முடியாது!

உன்னால் வழிகாட்டப்பட்ட
ஆயிரமாயிரம் தோழர்கள் - உன்
சிந்தனையைத் தாங்கியவண்ணம் -உன்
கையிலிருந்து நழுவிய ஆயுதத்தையே
ஏந்திய வண்ணம் பின்
தொடர்கிறார்கள்

எதிரிகளிடம் அன்பு காட்டு என்றாய்
ஆனால் இதை விளங்காத இந்த
மனிதப்பூச்சிகள்
இல்லை விளங்க மறுத்து வெறி
கொண்டலையும் பிணந்தின்னிகள் -
அதனால் தான்
மக்களை தன் பாதுகாப்பு
அரண்களாக்கி
மக்கள் தான் நாங்கள்! நாங்கள்
தான் மக்கள்! என்றும்
மக்களை நேசித்தும் மக்களுக்காக
வாழ்ந்தும் மடிந்தவர்களின்
நாமங்களை உச்சரித்துக் கொண்டும் -
நாங்களே
உங்களை இரட்சிக்க வந்த கன்ன
பரமாத்மாக்கள் என்றும்
மற்றவர்கள் எல்லோரும் துரோகிகள்
என்று மறுத்தார்கள்

இன்று இந்த பரமாத்மாக்களால்
மக்களை பாதுகாக்க முடியாமல் - ஏன்
தங்களையே பாதுகாக்க முடியாமல்
மீண்டும் எதிரியிடம் சரணடைந்து
யுத்தநிறுத்தமாம் பேச்சுவார்த்தையாம்
நிபந்தனையில்லையாம்

இது அர்த்தமுள்ளதுதானா ? இதை
நம்பலாமா?
இன்னும் இந்த ஏமாற்று வித்தை
எத்தனை நாளைக்கு ?

மௌனமான மக்கள் வாய்திறந்தால்
இந்த மகாத்மாக்களின் மகோன்னதம்
மண்ணோடு மண்ணாகும் - அன்று
அவர்களின் பேரால் வாழ்வு நடாத்தும்
சப்பாத்திகள் சமாதியாகிவிடும்!
அப்போது இந்தத் தாரகைகளின்
சரித்திரம் இந்த உலகமறியும்.

- சண்ஜெயசிங்கம் -
(பேர்லின்)

## வீரமரணமடைந்த தோழர்களுக்கு ஓராண்டு அஞ்சலிக்கூட்டம்

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகமாகவிருந்த தோழர் க. பத்மநாபா, உட்பட பதின்மூன்று தோழர்கள் சென்னையில் வைத்து புலிகளால் கோழைத்தனமாக படுகொலைசெய்யப்பட்ட(19 - 06 - 1990) ஓராண்டு நினைவஞ்சலிக் கூட்டங்கள் சென்னை, கோயம்புத்தூர், நீர்கொழும்பு, ஜேர்மனி, லண்டன் ஆகிய இடங்களில் இடம்பெற்றன.

### சென்னை

சென்னையிலுள்ள புழல் முகாமிலிருந்து வரும் அகதிகள் மத்தியில் ஓராண்டு அஞ்சலிக்கூட்டம் இடம் பெற்றது. அகதிகளால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இக் கூட்டத்தில் தோழர்களின் தியாகங்கள் நினைவுகூரப்பட்டன. இது தவிர தோழர்களின் நினைவாக ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணித் தோழர்கள், ஆதரவாளர்கள், அகதிகள் இரத்ததானம் செய்தமை முக்கியநிகழ்வாகும்.

### நீர்கொழும்பு

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தோழர்களும், ஆதரவாளர்களும் நீர்கொழும்பில் நினைவஞ்சலிக் கூட்டம் ஒன்றை ஒழுங்குசெய்திருந்தனர். ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் தோழர் க.பிரேமச்சந்திரன் (சுரேஷ்) கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.

தோழர் நாபாவின் அரசியல் வாழ்க்கையும், போராட்டவரலாறும் நமக்கு பெரும் படிப்பினையும், பாடமுமாகும் என தோழர் பிரேமச்சந்திரன் தனது தலைமையுரையில் தெரிவித்தார்.

வடக்கு கிழக்கு மாகாண முன்னாள் போக்குவரத்து அமைச்சர் தோழர் அபுயூசுப், ஈழத்தொழிற்சங்க சம்மேளனத் தலைவர் தோழர் வீ.ஏ.கந்தசாமி வவுனியாமாவட்ட ஈ.பி.ஆர். எல். எவ். பாராளுமன்ற உறுப்பினர்கள் தோழர் குகனேஸ்வரன், தோழர் அன்ரனி டிசில்வா, மற்றும் முன்னணித் தோழர்கள் துரைரட்ணம், சிந்தன் டி சில்வா ஆகியோர் உரையாற்றினர்.

### கோயம்புத்தூர்

தமிழ் நாட்டிலுள்ள கோயம்புத்தூர் நகரத்தில் மரணித்ததோழர்களின் நினைவஞ்சலிக்கூட்டம் நடைபெற்றது. இந்திய ஐக்கிய பொதுவுடைமைக் கட்சி ஒழுங்குசெயதிருந்த இக்கூட்டத்தில் இந்திய ஐக்கிய பொதுவுடைமைக் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

### ஜேர்மனி

ஜேர்மனியில் (BOCHUM) நகரில் நடைபெற்ற கூட்டத்தில் அக்னி, தேனீ, சிந்தனை வெகுஜனம், அறுவை ஆகிய ஜேர்மனியில் வெளிவரும் பத்திரிகைகளின் ஆசிரியர்களும், தமிழீழ விடுதலைக்கழக ஜேர்மன் பொறுப்பாளரும், ஈ.பி.ஆர். எல். எவ். தோழர்களும் கலந்துகொண்டு உரையாற்றினார்கள்.
பாசிசத்திற்கெதிரான சக்திகள் ஒன்று சேரவேண்டுமென வலியுறுத்தப் பட்டது. தோழர்களின் வீரமீரணம் மக்களின் விடுதலைக்கான உந்து சக்தியாக அமையும். இப்படுகொலை தெற்காசிய பிராந்தியத்தின் அமைதிக்கு எதிரான சக்திகளின் திட்டமிட்ட படுகொலை போன்றகருத்துக்கள் எடுத்துரைக்கப்பட்டன. தோழர் நாபாவின் அரசியல்உரைகள் அடங்கியஒலிநாடா (AUDIO CASSETTE) ஒன்றும்வெளியிடப்பட்டது

தோழர் நாபாவின் உரைகள், கருத்துக்கள் எழுத்துக்கள் தாங்கிவந்த புத்தகங்கள், வெளியீடுகள், தோழர் கிருபாகரன் வடக்கு கிழக்கு மாகாணசபையில் ஆற்றிய முதலாவது வரவு செலவுத்திட்ட உரை, மற்றும் ஈ.பி. ஆர். எல். எவ். வெளியீடுகள் அடங்கிய புத்தகக் கண்காட்சி ஒன்றும் வைக்கப்பட்டிருந்தது.

### லண்டன்

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செய்திப்பிரிவான ஈழமக்கள் செய்தித்தொடர்பு நிலையத்தின் லண்டன் கிளையில் இடம்பெற்ற நினைவஞ்சலிக் கலந்துரையாடலில் தோழர்கள் நினைவுகூரப்பட்டதோடு இன்றைய ஈழத்து நிகழ்வுகளும் அதனும் ஈ.பி.ஆர் எல்.எவ். ஆற்றவேண்டிய பங்கும் தோழர்கள் எமக்கு விட்டுச்சென்றுள்ள பணியும் பற்றிய கருத்துக்கள் பரிமாறப் பட்டன.

★ ★ ★ ★ ★

படிப்பகம்

# முறிந்த பனை 2



திருமதி ரஜனிதிரணகம,மூன்றுவிரிவுரையாளர்களுடன் சேர்ந்துஎழுதி வெளியிட்ட "THE BROKEN PALMYRAH" (முறிந்தபனை என்னும் நூலின் தமிழாக்கத்தின் சிலபகுதிகள் "விடுதலை" பத்திரிகையில் 01.01.1990.முதல் வெளிவந்துள்ளது.அதனை தொடர்ச்சியாக இங்கே மறுபிரசுரம் செய்கிறோம்.

இந்நூலை எழுதிவெளியிட்டதன் காரணமாகவே ரஜனி கொலைசெய்யப்பட்டார். யா/பல்கலைக்கழக மருத்துவபீட உடற்கூற்றியல்துறை தலைவராக இருந்த திருமதி ரஜனிதிரணகம, தமது சகோதரியான திருமதி நிர்மலாநித்தியானந்தன் போலவே புலிகள்இயக்கத்திலிருந்து முரண்பட்டு வெளியேறியவர். தமது அமைப்பிலிருந்து முரண்பட்டுவெளியேறி, விமர்சிப்பவர்களுக்கு புலிகள்வழங்கும் தண்டனை,இவருக்கு 35 ஆவது வயதிலேயே வழங்கப்பட்டது.

## மக்கள் இன்னமும் தங்கள்எதிர்ப்பினை மௌனமாகவே தெரிவிக்கின்றனர்.

"இந்தியாவை என் காலடியில் விழச் செய்வேன்" என இந்த புலி இயக்கத் தலைவர் கூறியதாக சொல்லப்படுகிறது.ஆனால் நிராயுதபாணிகளாக்கப்பட்ட பயிற்சிபெற்ற ஏனைய இயக்கங்களின் அல்லது தங்களுடன் விரோதமாக உள்ள மக்கள் பிரிவினரின் ஆதரவைநாடும் தேவைஏற்படும் என்று புலிகள் அறிந்திருக்கவில்லை.

மக்களைப்பொறுத்தவரையில் மரணம் அவர்களை நோக்கி மெல்ல மெல்ல, ஆனால் நிச்சயமாக கௌவிக் கொண்டிருந்தது.இயல்பான வாழ்க்கையும், கல்வியும் கடுமையாக சீர்குலைந்திருந்தன வெளிநாடுகளுக்குப் போக முடியாதவர்கள் அனைவரும் மெதுவாக நழுவிக் கொண்டிருந்தனர்.

சர்வதேச ரீதியிலும் ஓங்கச்செய்வதே அரசின் திட்டமாகும். இந்நோக்கத்துடன் இராணுவத்துக்கு வெளிநாட்டு நிபுணர்குழுக்கள் மூலம் பயிற்சியளிக்கப்பட்டது.இஸ்ரேல், இங்கிலாந்து, பாகிஸ்தான் ஆகியவையே இவ்வாறு உதவி வழங்கிய நாடுகளில் சிலவாகும்.அமெரிக்காவின் பங்கும் இதில் இருந்ததாக நம்பப்படுகிறது.

தேசிய வரவு செலவுத் திட்டத்தில் 20 சதவீதத்தை, அதாவது ஐம்பது கோடி அமெரிக்க டொலர் வருடாந்த பாதுகாப்புச் செலவுக்கு ஒதுக்கப்பட்டு, அதன் மூலம் விமான, கடற்படைஉதவிகளும் விருத்தி செய்யப்பட்டன. நுட்பவியல் வல்லுனர்களின் அணுகுமுறை பற்றிக்குறிப்பிட வேண்டிய விடையங்களுண்டு 1971ல்

> இந்தியாவை என்காலடியில் விழச்செய்வேன் என இந்தப்புலி இயக்கத்தலைவர் கூறியதாக சொல்லப்படுகிறது. ஆனால் நிராயுதபாணிகளாக்கப்பட்ட பயிற்சி பெற்ற ஏனைய இயக்கங்களின் அல்லது தங்களுடன் விரோதமாக உள்ள மக்கள் பிரிவினரின் ஆதரவைநாடும் தேவை ஏற்படும் என்று புலிகள் அறிந்திருக்கவில்லை.

கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில், இப்பிரச்சனையை தேசிய பாதுகாப்பு அமைச்சு பின்வருமாறு நோக்கியது. எதிர்காலத்தில் வடக்கு கிழக்கிலுள்ள தமிழர்களின் வாக்குகளைப் பெறும் வாய்ப்புஇல்லை அதனால் அவர்கள் ஆதரவைப்பெற வேண்டும் என்றஎண்ணம் கைவிடப்பட்டது. தமிழர்களின் உணர்வுகள் உதாசீனப்படுத்தப்பட்டன என்பதே இதன்அர்த்தம்.(இக்கருத்தை "டெய்லி ரெலிகிராஃப" என்ற செய்தித்தாளுக்கு ஜனாதிபதி 1983 யூலையில் கூறியுள்ளார்).

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கான நடவடிக்கையின் விளைவாக ஏற்படும் பொதுமக்களின் இழப்பு சர்வதேசரீதியாக ஏற்றுக்கொள்ளக் கூடியதாக அவசியம் இருந்தாக வேண்டுமென கருதப்பட்டது. தாக்குதலின் துரிதமே அவ்வாறான தாக்குதலின் முக்கிய அம்சமாக அமைந்திருந்தது. ஏனெனில் அந்நேரத்தில் சர்வதேச அபிப்பிராயம் ஸ்ரீலங்கா அரசின் பக்கமே இருந்தது. தாக்குதல் நீடிக்கப்பட்டிருந்தாலோ, பொதுமக்களின் சேதங்கள் பற்றிய செய்திகள் வெளியே பரவியிருந்தாலோ சர்வதேச அபிப்பிராயம் மாறியிருக்கக்கூடும். இந்தச்சூழ்நிலை இந்தியாவுக்குச் சாதகமான ஒரு சந்தர்ப்பத்தை அளித்திருக்கும்.

இவ்வகையில் பார்த்தால் இப்பிரச்சினை, மனிதாபிமான நிலைமைகளைக் கருத்திலெடுத்துக் கொள்ளாத நுட்பவியல் வல்லுனர்களின் அணுகுமுறைக்குரியதாகக் காணப்படுகிறது. அரசாங்கமோ புலிகளை, வரும் பல காலங்களுக்குச் சீர்குலைக்கக்கூடிய முன்றுநான்தாக்குதலையே சிந்தித்திருக்கிறது.

வெற்றிகரமாக இத்தாக்குதலை முடிப்பதன்விளைவாக வரும் பிரபல்யத்தைப் பயன்படுத்தி, சமுதியாகத் தேர்தலை வைத்து தங்கள் கையை உள்நாட்டிலும்

சிங்களக்கிளர்ச்சியாளர்களான ஜே.வி.பி.யினரைப் பயிற்சிபெற்ற இராணுவத்தினர் கொன்று குவித்த வீதத்திலும் பார்க்க வடமராட்சி மீட்பு நடவடிக்கையின்போது நடந்த கொலை வீதம் குறைவாகவே இருந்தது.

இதற்குமாறாக ஜே.வி.பி.யினரின் மறுஎழுச்சிக்கெதிராக இன்று கையாளப்படும் அணுகுமுறை மிகவும் வித்தியாசமானது.20.12.1987 திகதியில் வெளியான "வீக் எண்ட்" வாரஇதழில் இக்பால் அதாஸ் என்பவர் "கேந்திர அறிக்கை" என்றதலைப்பில் தென்னிலங்கை கிளர்ச்சிக்கு எதிரான நடவடிக்கைகள் பற்றி பின்வருமாறு எழுதுகிறார். இந்திய அமைதிகாக்கும் படைகள் வருவதற்குமுன் வடக்கே பிரிவினைகோரும் பயங்கரவாதிகளுடன் நடத்தியயுத்தத்தில் இராணுவத்துக்கும் எதிரிகளுக்கும் இடையிலான மோதல் என்பது துப்பாக்கிச் சூட்டில் வேகம் குறைந்தவருக்கான மரணத்தையே குறித்தது. இந்நிலைமை வடக்கில் மட்டுமே, ஆனால் தெற்கில் அத் துப்பாக்கியானது எதிரியை இசையச்செய்யும் தந்திரோபாயத்திற்கே பயன்படுத்தப்பட்டது.

அதேகட்டுரை எம்பிலியப்பிட்டியாவிலுள்ள இராணுவ இணைப்பு அதிகாரியான கேணல் லக்ஸ்மன் அருகமவின் கூற்றாக இதை மேற்கோள் காட்டுகிறது. "ஒரு இராணுவ நடவடிக்கையின்போது, நான் நூறு மக்களைக் கைதுசெய்வேனாகில், அதில் ஐந்துபேரே துஷ்டர்களாக உள்ளனர். ஏனைய 95 பேரும் விடுவிக்கப்படும்போது, அவர்கள் எவ்வித மனக்கசப்பும் இல்லாமல் கட்டாயம் செல்லுதல் வேண்டும்". கட்டுரையாளர் மேலும் கூறுகையில், "இதுபெருமைப்படமுடியாத ஒருகாரியம் அமெரிக்காவில் விசேட பயிற்சிபெற்ற அர்ப்பண உணர்வுள்ள இப்போர் வீரரின் நல்லெண்ணங்களுக்கிடையிலும்,

அப்பாவிமக்களென விடுதலை செய்யப்பட்ட பெரும்பாலானவர்கள் பாதிக்கப்பட்ட உணர்வுடனேயே வெளியேறுகின்றனர். பாதுகாப்புப் படையினரும் பொலீசாரும் எல்லைப்படுத்தப் பட்ட அளவிலேயே செயல்படமுடிகிறது. பிரச்சினைக்கான விடை அவர்கள் கையில் இல்லை.பிரச்சினைகள் பொருளாதார ரீதியானதும் அரசியல் ரீதியானதும் ஆகும். இதில் எவ்வளவு தாமதம் ஏற்படுகிறதோ பிரச்சனைகளும் அவ்வளவு பெரிதானவையாக அமைந்துள்ளது.

இவ்வருடத்தின் முற்பகுதியில் அடைந்த முன்னேற்றத்தின் காரணமாக, யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதுமே இலகுவான குண்டுவீச்சு எல்லைக்குள் இருந்தன உரும்பிராய் போன்றஇடங்களில் உள்ள பல வீடுகள், தமது வீட்டுச்சுவர்களுக்கு அருகாமையில் மண்மூடைகளை அடுக்கியிருந்தனர். இவ்வாறான சேவைகளை அளிப்பது இலாபகரமான வேலைவாய்ப்பாகவும் அந்நேரத்தில் இருந்தது.

வஞ்சந்தீர்க்கும் நோக்குடன் தொடர்ச்சியாக நடத்தப்பட்ட கொடூரக்குண்டு வீச்சுக்களும், பேரிழப்புக்களும் மக்களின் வாழ்க்கையைப் பயங்கரம் நிறைந்ததாக்கியது.

மே மாதம் 18ம் திகதி திசைதிருப்புவதைக் நோக்காகக் கொண்ட ஒரு பகுதி இராணுவத்தினர், ஆனையிறவு முகாமிலிருந்து மேற்காக நகரத்தொடங்கினர்.கொழும்பிலிருந்து"சேஃப்ரிபஸ்" ஸில் வந்த பெரும்பாலான பயணிகள் தெருவுக்கு குறுக்கே போடப்பட்டிருந்த மரக்குற்றிகளைக் கண்டதும் பஸ்ஸைவிட்டு கீழே இறங்கினார்கள். ஒரு சிலர் மரக்குற்றிகளை அகற்றிவிட்டு மேலே சென்றார்கள். அச்சமயத்தில் ஒரு சுற்றுத் துப்பாக்கிச் சூட்டினைத் தொடர்ந்து பஸ்நிறுத்தப்பட்டது. பல பயணிகள் காயமடைந்தனர். படையினர்க்கண்டு தொடர்புகொண்டு, என்ன நடந்தது என்று அனுமானிப்பதற்கு வெகுநேரம் சென்றது. பஸ் காற்றிறங்கிய ரயர்களுடன் ஆனையிறவை நோக்கித் திரும்பிச் சென்றது.

வடக்கைச் சேர்ந்த டாக்டர் ஒருவர் கிளிநொச்சிக்கு சென்று, இராணுவத் தளபதியைச் சந்தித்து, அம்புலன்ஸ் வந்தபின்பே, காயம் பட்டசிலர் ஹெலிகொப்டர் மூலம் அநுராதபுரத்துக்கு வைத்திய உதவிக்காக எடுத்துச்செல்லப்பட்டனர்.

> இந்திய அமைதிகாக்கும் படைகள் வருவதற்கு முன் வடக்கே பிரிவினைகோரும் பயங்கரவாதிகளுடன் நடத்திய யுத்தத்தில் இராணுவத்துக்கும் எதிரிகளுக்கும் இடையிலான மோதல் என்பது துப்பாக்கிச்சூட்டில் வேகம் குறைந்தவருக்கான மரணத்தையே குறித்தது. இந்த நிலைமை வடக்கில் மட்டுமே,ஆனால் தெற்கில் அத் துப்பாக்கியானது எதிரியை இசையச்செய்யும் தந்திரோபாயத்திற்கே பயன்படுத்தப்பட்டது.

## மீட்பு நடவடிக்கை ஆரம்பமாகியது.

யாழ்-குடாநாட்டைத் திரும்பக் கைப்பற்றுவதற்கான ஆய்வு முயற்சிகளும், திசை திருப்பு நடவடிக்கைகளும் மே மாதம் 18 ம் திகதி அளவில் ஆரம்பமாகின."ஒப்பரேஷன் லிபரேஷன்" என அழைக்கப்பட்ட இத் தாக்குதல் மெச்சத்தக்க வினைத்திறனுடனேயே திட்டமிடப்பட்டு நடத்திமுடிக்கப்பட்டது.

வரையறுக்கப்பட்ட வளங்களையுடைய சிறிய நாடாதலால், மூலவளங்களை உரியநேரத்தில் சரியாக உபயோகித்தல் அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது.' இதற்கான புலனாய்வு தகவல்சேகரித்தலும், பகுப்பாய்வு செய்வதற்குமான ஆற்றல் வெளிநாட்டவரின் (முக்கியமாக இஸ்ரேலியர்) வியக்கத்தக்க அளவிலான, உதவியுடன் வலுப்படுத்தப்பட்டது. இந்த அணுகுமுறையைப் பொறுத்தவரையில், அரசாங்கமானது இதைச் செவ்வனே செய்துமுடிப்பதற்கு தேசிய பாதுகாப்பு அமைச்சராக மிகவும்தகுதியுடைய திரு அதுலத்முதலியைக்கொண்டிருந்தது.

(தொடரும்)

★ ★ ★

## 1983 இரத்த யூலை

யூலைப்படுகொலைகளின் எழுச்சி விடியலைத் தரும் என மக்கள் நம்பினர். ஆனால் அராஜகமும், பாசிசமும் கைகோர்த்துக் கொண்டதால் யூலையும், படுகொலைகளும் வந்து வந்து போகின்றன.

ஆனால் விடியல் மட்டும்................

வரலாற்றுச் சக்கரம் என்றுமே பின்னோக்கி உருளுவதில்லை.

மக்கள் ஒரு நாள் வென்றே தீருவர் ! ! !

★ ★ ★ ★ ★ ★ ★

www.padippakam.com



# 2 அரசியல் அழிவுகளும் மனித சோகங்களும்

மனிதஉரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர் அமைப்பு (யாழ்ப்பாணம்) 04.02.1991.ல் அறிக்கை ஒன்றினை வெளியிட்டது. ஸ்ரீலங்காவில் இடம்பெற்ற அழிவுகள், அரசபயங்கரவாதம், இயக்கங்களின் அராஜகநடவடிக்கைகள் போன்றவற்றை படம்பிடித்துக் காட்டியுள்ள இவ்வறிக்கையை தொடர்ச்சியாக இங்கே பிரசுரிக்கவுள்ளோம்.

தமது சொந்தத்தவறுகள் காரணமாகவே சர்வதேச ரீதியாகப் தாம் சிறுமைப்பட்டும் பலவீனமுற்றும் இருப்பதை சிங்கள மக்கள் உணர்வதாக இல்லை.

சிறுபான்மையினர் சிறுமைப்படும் போது உலக அபிப்பிராயம் அவர்களுக்கு சாதகமாகத்திரும்புகிறது. 1983 யூலை மாத சம்பவங்கள் படங்களாகப் பிடிக்கப்பட்டபோது அவை சர்வதேச ரீதியாக ஆழமான வடுக்களை ஏற்படுத்தின. ஏனெனில் அப்போது அரசின் தலைவர்கள் வெளிப்படையாகவும், வெட்கமின்றியும் ஒரு சிறுபான்மை இனத்தைப் பயமுறுத்தினர். இந்தநிலையில் தமிழ்த் தீவிரவாதிகளின் தீவிரவாதச்செயல்கள் சர்வதேச ரீதியாக கவனத்தை ஈர்க்கவில்லை. அரசும் தமிழ் மக்களின் நம்பிக்கையைப் பெறும் நடவடிக்கைகளுக்குப் பதிலாக மேலும் தாறுமாறாக நடந்துகொள்ள ஆரம்பித்தது. இது அரசின்மீதான விசுவாசத்தை மேலும் இழக்கச்செய்தது. தாம் தனிப்பட்டுப்போனதாக ஒரு உணர்வை ஏற்படுத்தவும் செய்தது.

> நாம் இந்த நாட்டில் காண்பது மக்கள் எதிர்ப்பு அரசியலே தவிர மக்கள் சார்பான அரசியல் அல்ல. நாம் மக்கள்சார்பான அரசியலைக் கைக்கொண்டிருக்கவில்லை. அரச விரோதம் என்ற அடிப்படையில் ஆரம்பித்த தமிழ்அரசியல் சீக்கிரமே சீர்குலைந்து மக்கள் விரோத அரசியலாயிற்று. வேறு எந்த ஒரு போராட்டமும் இத்தனை துரோகிகளை உருவாக்கியதில்லை.

மேலும் சர்வதேச ரீதியான அவர்களது சக்தியற்ற நிலை அவர்களை ஆத்திரமுற்று அறிவிழக்கச் செய்ய முற்பட்டது. இந்தியா தமிழ்த் தீவிரவாதிகளுக்கு பயிற்சியளிக்க ஆரம்பித்தபின்னர் இலங்கை இராணுவத்துக்கும் பயிற்சியளிக்க இந்தியா முற்பட்டது. இந்திய நிறுவனங்கள் இலங்கை இராணுவத்துக்கு சாதனங்களை விற்பனைசெய்யும் டெண்டர்களில் கலந்துகொள்ள ஆரம்பித்தன. ஜனாதிபதி றேகனின் பிரதிநிதியான வேர்னன் வால்டர் இலங்கை இராணுவத்துக்கு உதவ இஸ்ரவேலிய இராணுவத்தை ஏற்பாடு செய்தார். ஆனால் இதே இஸ்ரவேலிய மொஸாட், விடுதலைப்புலிகளுக்கும் பயிற்சி அளித்ததாக சமீபத்தில் தகவல்கள் வெளியிடப்பட்டன. இதே சமயம் கோவில்களும் மனித உரிமை அமைப்புகளும் அரசுக்கு உதவ முன்வரவில்லை. இந்நிலையில் றேகன், தாட்சர் அல்லது காந்தி ஆகியோர் பேரில் தன்சினத்தைக் காட்ட முடியாத பாதுகாப்பு அமைச்சர் தமது சொந்தக் குடிமக்களுக்கு அப்பால் சர்வதேச மன்னிப்புசபை மற்றும் கோவில் அமைப்புகள் மீது தன் கோபத்தைக்காட்ட முற்பட்டார்.

நலிவுக்கான அறிகுறி சுதந்திர போராட்டங்களுடன் பல சர்வதேச மனித உரிமைகள் இயக்கங்கள் நீண்டகாலமாகவே நெருங்கிய தொடர்புகளைக் கொண்டுள்ளன. இவ்வியக்கங்கள் அரசாங்கங்களின் துஷ்பிரயோக நடவடிக்கைகளை வெளிப்படுத்தும் அதேசமயம் இவ்வியக்கங்கள் தீவிரவாத அமைப்புக்களில் ஏற்படும் சீர்கேடுகளையும் வெளிப்படுத்த வேண்டிய அவசியம், இவ்வாறான போக்கு தீவிரவாத அமைப்புகளின் பேரில் சில கட்டுப்பாடுகளை ஏற்படுத்தும், பலவீனமான அரசாங்கத்தின் மயக்க நிலையை அகற்றும். இது அரசாங்கம் புதிய மனிதநேய நடவடிக்கைகளை பரிசோதித்துப் பார்க்கவும் மாற்று கருத்துக்கள் வெளிப்படுத்தவும் உதவும்.

> ஜனாதிபதி றேகனின் பிரதிநிதியான வேர்னன் வால்டர் இலங்கை இராணுவத்துக்கு உதவ இஸ்ரவேலிய இராணுவத்தை ஏற்பாடு செய்தார். ஆனால் இதேஇஸ்ரவேலிய மொசாட் விடுதலைப் புலிகளுக்கும் பயிற்சி அளித்ததாக சமீபத்தில் தகவல்கள் வெளியிடப்பட்டன.

நாம் இந்தநாட்டில் காண்பது மக்கள் எதிர்ப்பு அரசியலே தவிர மக்கள் சார்பான அரசியல்அல்ல. நாம் மக்கள் சார்பான அரசியலைக்கைக்கொண்டிருக்கவில்லை. அரசவிரோதம் என்ற அடிப்படையில் ஆரம்பித்த தமிழ் அரசியல் சீக்கிரமே சீர்குலைந்து மக்கள் விரோத அரசியலாயிற்று. வேறு எந்தவொரு போராட்டமும் இத்தனை துரோகிகளை உருவாக்கியதில்லை.

இன்றைய சர்வதேச ரீதியான அபிப்பிராயங்கள் தமிழர்கள் தமக்குத் தாமே செய்துகொள்ளும் கேடுகளை விமர்சிப்பதாக உள்ளது. பொறுப்புக்களுக்கு அப்பாற்பட்ட நிலையில் அளவுக்கதிகமான சுய பச்சாதாபத்தை தூண்டியதன்மூலம் நாம் குட்டிச்சுவராக்கப்பட்டுள்ளோம். நாம் எந்த விடுதலையின் பேரில் இப்போது போராடிக் கொண்டிருக்கிறோம். மானத்துடன் வாழ நாம் போராடுவதாகஇல்லை. அல்லது எம்மை சுதந்திர மனிதஇனமாக அபிவிருத்தி செய்து சமூகத்தின் நன்மைக்காகவும் உலக நன்மைக்காகவும் எமது படைப்புத் திறனை வெளிப்படுத்துவதற்காகப் போராடுகிறோமா ?

ஆனால் பொய்உரைப்பதற்கும் பைத்தியக்காரத்தனமான இனப்பற்றுக்கும் கொலை செய்வதற்கும் எதிராளிகளை காயப்படுத்துவதற்கும் நாம் உலகின் இணக்கத்தை வேண்டிவருவதாகவே தெரிகிறது.

1987 ம் ஆண்டு அக்டோபர் 10ம் திகதி இந்தியப்படையினருடனான மோதல் ஆரம்பிப்பதற்கு முன்னர் 70 க்கும் அதிகமான அதிருப்தியாளர்கள் மற்றும் 200 சிங்கள சிவிலியன்கள் கொலை செய்யப்பட்டனர். அதன் பின்னரே மோதல் ஆரம்பித்தது. இன்றைய மோதல்களுக்கும் இதுவே காரணமாக அமைந்தது. மனித உரிமைகளுடன் தொடர்புகொண்ட அமைப்புகள் தமது எல்லைகளை விரிவுபடுத்தி தமது நடவடிக்கைகளை மீள அமைத்துக்கொள்வதற்கு இதுவே தருணம். அவை உண்மைநிலையை முழுமையாகத் தெரிந்து கொள்வதாக இருக்கவேண்டும். இதைத்தவிர வேறு பகுதிகளும் உண்டு. இங்கும் சர்வதேச அமைப்புகள் பயனுள்ள வகையில் பணியாற்றி மக்களின் நலன்களைப் பாதுகாக்க முயற்சிக்க வேண்டும். மக்கள் நலனையே முக்கியமாகக் கருதும் அமைப்புகளால் இந்நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

## வெளிநாடுகளில் வாழும் பிரஜைகளுக்கு ஒருவேண்டுகோள்.

யுத்தத்தின் மத்தியில் மக்கள் நிச்சயமற்ற சூழலில் எதையும் ஆக்கபூர்வமாக செய்யும் சக்தியற்ற நிலையில் இருக்கும் இச்சமயத்தில் எமது அறிக்கைகள் வெளிநாடுகளிலுள்ள பல்வேறு பிரிவ

> நாம் எந்த விடுதலைப் போரில் இப்போது போராடிக்கொண்டிருக்கிறோம். மானத்துடன் வாழ நாம் போராடுவதாக இல்லை. அல்லது எம்மை சுதந்திர மனித இனமாக அபிவிருத்தி செய்து சமூகத்தின் நன்மைக்காகவும் எமது படைப்புத் திறனை வெளிப்படுத்துவதற்காகப் போராடுகிறோமா ?

களிடையே குழப்பநிலையைத் தோற்றுவித்துள்ளன. இச்சமயத்தில் வெளிநாடுகளில் வாழ்ந்துவரும் நம் நாட்டுப் பிரஜைகளுக்கு சிலவிடயங்களைக் கூற விரும்புகிறோம்.
எமது வாழ்க்கை மற்றும் எதிர்காலம் பற்றி சில முக்கிய கேள்விகளை அவர்களிடம் எழுப்பவிரும்புகிறோம். அவர்கள் விரும்புகிறார்களோ இல்லையோ அவர்களுடைய விருப்பு மற்றும் செயற்

> நாட்டைவிட்டு வெளியேற முடியாதவர்கள் யுத்தத்தின் கொடுமையைத் தாங்கிக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே செல்வாக்கைப் பிரயோகித்து முடிவுகளை மேற்கொள்ளக் கூடியவர்கள் சில உண்மைகளை உணர்ந்து கொள்ளவேண்டும். தமது நடவடிக்கைகளால் சமூகத்தில் ஏற்படும் விளைவுகள் குறித்து அவர்கள் ஆழமாக சிந்திக்கவேண்டும். நாம் எதைநோக்கிச்செல்கிறோம் என்பது பற்றி அறிந்து வைத்திருக்க வேண்டும். இப் போராட்டத்துக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் பலர்உதவியிருக்கின்றனர். கொலைச்சம்பவங்கள் நடைபெற துணை போனவர்கள் பின்னர் அதனைத்தவறு என்று கூறியிருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் மேற்குலகில் நல்லபடி வாழ்ந்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பாடுகள் இலங்கையில் வாழும்மக்களின் தலைவிதியின்பேரில் செல்வாக்கைப் பிரயோகிக்கவே செய்கின்றன. பெருமளவு இளைஞர்களும் யுவதிகளும் விரும்பியோ விரும்பாமலோ தமது உயிரைத்தியாகம் செய்து வருகிறார்கள். நாட்டைவிட்டு வெளியேற முடியாதவர்கள் யுத்தத்தின் கொடுமையைத் தாங்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவே செல்வாக்கைப் பிரயோகித்து முடிவுகளை மேற்கொள்ளக் கூடியவர்கள் சில உண்மைகளை உணர்ந்து கொள்ள வேண்டும். தமது நடவடிக்கைகளால் சமூகத்தில் ஏற்படும் விளைவுகள் குறித்து அவர்கள் ஆழமாக சிந்திக்கவேண்டும். நாம் எதைநோக்கிச் செல்கிறோம் என்பது பற்றி அறிந்து வைத்திருக்கவேண்டும். இப்போராட்டத்துக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் பலர் உதவியிருக்கின்றனர். கொலைச் சம்பவங்கள் நடைபெற துணைபோனவர்கள் பின்னர் அதனைத் தவறென்று கூறியிருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் மேற்குலகில் நல்லபடி வாழ்ந்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களைப் பொறுத்தவரை நடைபெற்ற விஷயங்கள் எல்லாம் தாமரை இலைத் தண்ணீரைப்போல மேலும் பலரும் இப்பொறுப்பற்ற பாதையில் பயணம்செய்யலாம். ஆனால் சொந்தநாட்டு மக்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு இழைக்கப்பட்ட சேதங்கள் ஈடுசெய்ய முடியாதவை.

(தொடரும்)


ஈழமக்கள் செய்தித் தொடர்பு நிலையம்.

EELAM PEOPLES INFORMATION CENTRE.

| | | | |
|---|---|---|---|
| POST BAG - 5551<br>MADRAS - 600094<br>INDIA. | B.M. BOX -1738<br>LONDON-WCIN-3XX<br>U.K. | POST FACH - 100206<br>4600 DORTMUND - 1<br>WEST GERMANY. | POST BOX - 52<br>LAVERTON<br>VICTORIA-3028<br>AUSTRALIA. |
| P.BOX. 6800<br>AGINCOURT<br>ONTARIO M1S3C6<br>CANADA. | BOITE NO - 69<br>7 - RUE RACINE<br>95140 - GARGES<br>FRANCE. | POST BOKS -115<br>GROURD HAGEN<br>0905 - OSLO - 9<br>NORWAY. | |



ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பிரச்சாரச் செய்திப்பிரிவான ஈழமக்கள் செய்தித்தொடர்பு நிலையத்தின் ஐரோப்பியபிரிவினால் 'புதியபார்வை' வெளியிடப்படுகிறது.


படிப்பகம்